ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3 — தனிப்பிரதி அணு 4

மலர் 11 — 1950, ஸெப்டம்பர் — இதழ் 9

ஆசிரிய மாநாடுகள் ஆலயத் திருவிழாக்களல்ல !

வளர்ந்த யூனியன்கள் வீழ்ந்ததேன் ? என்ற தலைப்பின் கீழ் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஓர் கட்டுரை வரைந்திருக்கின்றார். அதை ஒவ்வொரு ஆரம்பாசிரியர்களும் நன்றாகக் கூர்ந்து படித்துச் சிந்திக்க வேண்டியதாகும். கடந்த பத்து ஆண்டுகளாக வளர்ந்த, வாழ்ந்த, ஆட்சியாளர்களால் அங்கீகரிக்கப்படாத, யூனியன்கள் இன்று வீழ்ந்திருப்பதற்கு அவர் காட்டும் காரணம் ஆசிரியர்களின் ஒற்றுமையின்மை என்பதே. அவ்விதம் ஆசிரியர்கள்பால் ஒற்றுமைக் குறைந்ததற்கு அடிப்படையான காரணங்கள் பற்பல.

அதில் முக்கியமானவை சுயநலம், பொறாமை, ஏமாற்றுந் தன்மை, தன்னம்பிக்கைக் குறைவு, தாழ்வு மனப்பான்மை, அடிமையில் மோகம், மதியை மறந்து விதியில் வைத்துள்ள நம்பிக்கை, பேசுவதொன்று செய்வதொன்று, பழமையில்

பாசம், புதுமையில் வெறுப்பு, சீர்திருத்தத்தில் சீற்றம், அசட்டுத் தன்மை, சிந்தனைக்கு இடங் கொடாமை, சிந்தித்ததைச் செய்ய துணிவின்மை, பேசினதையே பேசிக்கொண்டுத் திரியும் சோம்பேரித் தன்மை, போன்ற பல காரணங்கள், வாழ்க்கையை வளமாக்காமல் ஆசிரியர் சமூகத்தைத் தாழ்த்திப் பாழ்படுத்திக் கொண்டு வருகிறது.

மேற்குறித்த குறையபாடுகளை, காரணங்களை தற்போதுள்ள ஆசிரிய சமூகம், சற்று சிந்தித்துத் தங்களைத் தாங்களே சீர் திருத்திக்கொள்ள முன் வரவேண்டும். அதிலும் முக்கியமாக சங்கங்களின் காரியதரிசிகளென்றும், தலைவர்களென்றும், பெயர் வேண்டுமென்று ஆசைப்படும் ஆசிரிய நிர்வாகத் தோழர்களுக்கு, நாம் எடுத்துக் காட்டும் குறைபாடுகள் இல்லாமலிருக்க வேண்டியது மிகமிக அவசியம், ஆசிரியர் யூனியன்கள் ஒற்றுமைப்பட வேண்டுமானால். நம் நாட்டில் ஆசிரியர் சமூகம் பலவகையிலும் முன்னேறாமல் இடர்பட்டு இருப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம், ஆசிரியர் சங்கங்கள் சுயநலமற்ற நிர்வாகஸ்தர்களைக் கொண்டு நடத்தப் படாமையேயாகும். தலைவரென்றோ, காரியதரிசியென்றோ தங்கள் பெயர் அடிக்கடி பத்திரிகைகளில் விளம்பரம் வரவேண்டும், அல்லது கடிதம் எழுதும் தாளிலோ தாங்கள் தலைவர் என்றும், காரியதரிசி என்றும் குறிப்பிட்டிருந்தால் போதும் என்று சில விளம்பர விரும்பிகள் இருக்கின்றார்கள் நமது சங்கங்களில். சிலர் வருடாந்திர மகோற்சவம் நடத்துவதற்கு வருடா வருடம் தண்டல் தண்டி, பஜனைக் காலக்ஷேபம் நடத்தி, பிரசாதம் கொடுக்கும் பக்தர்களைப்போல், நமது ஆசிரியர்களில் சிலர் முந்திரிக் கொட்டைகளைப் போல் முன் வந்து, நாங்கள் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று வாய் வீரம் பேசி, வறுமையில் வாடும் உபாத்தியாயர்களிடத்தில் ரூபாய் ஒன்று, இரண்டு வசூல் செய்து, மகா நாடுகள் கூட்டுகிறார்கள். மந்திரி மார்களையும், தங்களுக்கு வேண்டிய சில பிரமுகர்களையும் கொண்டு வருவதிலும், அவர்களுக்கு உபசரணைச் செய்வதிலும், மாலை மரியாதைகள் ஏற்பாடு செய்வதிலும், அவர்கள் முழு ஊக்கமும், உணர்ச்சியும் பாழாகின்றதே யொழிய, எதற்காக மகாநாடு கூட்டுகின்றோம், எந்தக் கருத்தை மகா நாட்டில் மந்திரிமார்கள் உள்ளத்தில், பொது மக்கள் உள்ளத்தில் ஊன்றும்படிச் செய்ய வேண்டும், தற்போது ஆசிரியர்களுக்குள்ள முக்கிய பிரச்சனைகள் என்ன, அதை அரசாங்கத்தாரால் எப்படிச் செய்யத்தூண்ட வேண்டு மென்பதைப்பற்றி யெல்லாம் மகாநாடுகள் கூட்டும் முக்கியஸ்தர்கள் கவனிப்பது கிடையாது.

மந்திரிகள் ஆசிரியர்பால் அன்பாக பேசினார்கள், வந்திருந்த அறிஞர்கள் அருமையான சொற்பொழிவு ஆற்றினார்கள். கூட்டம் பெரியதாக இருந்தது, சுமார் 50 தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன, என்றெல்லாம் நிகழ்ச்சிகளை பத்திரிகைகளில் வெளியிடச் செய்து, மகா நாட்டை முடித்து மகிழ்வடைவதோடு நின்றுவிடுகின்றனர் முக்கியஸ்தர்கள்,

மகா நாட்டின் விளைவு ஒரு தீர்மானமாவது நடை முறையில் வெற்றி பெறுவதில்லை. ஆசிரியர்கள் பண நஷ்டமும், முக்கியஸ்தர்கள் உடல் கஷ்டமும் ஏற்படுகிறதே தவிர, குறிப்பிட்டப்பலன் ஏதும் கிடைப்பதில்லை. ஆண்டிகள் மடம் கட்டக் கூடுவதுபோல், திருவிழாவிற்கு ஜனங்கள் சேர்வதுபோல், ஆசிரியர்கள் கூடுவதும், கலைவதுமாக இருக்கின்றார்கள். இப்பொழுது நடத்தப்பட்டு வரும் மகா நாடுகள் உண்மையாகவே ஆசிரியர் முன்னேற்றத்திற்கான மகாநாடுகளல்ல, அவை திருவிழாக்கள் என்றால் மிகையாகாது.

ஒரு மகா நாடு கூட்டப்பட்டால் ஒரு குறிப்பிட்டக் கருத்தை, காரியத்தைக் குறிப்பிட்டு நடத்தப்படவேண்டும. குறிப்பிட்டக் காரியம் நிறைவேற்ற, வந்துள்ள ஒவ்வொரு ஆசிரியரும் முன்னின்று செயலாற்ற சற்றுத் துணிந்து நிற்க வேண்டும். அப்படித் துணிந்து செயலாற்ற மனமில்லாத ஆசிரியர்கள் ஒன்றுகூடி மகா நாடுகள் நடத்துவதில் என்ன பயன்? இதுவரை எத்தனையோ மகாநாடுகள், ஜில்லா, தாலுக்கா கூட்டங்கள் கூடி கலைந்திருக்கின்றன. ஆனால், ஆசிரியர் சமூகம் இம்மியளவேனும் உயர்ந்த பாடில்லை. சமீபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாடு நடக்கப் போவதாக ஓர் குறிப்பு அனுப்பப்பட்டிருந்தது. அக் குறிப்பை இப் பத்திரிகையிலும் பிரசுரித்திருந்தோம், மகா நாட்டின் முக்கியஸ்தர்களின் வேண்டுகோளின்படி.

அந்தக் குறிப்பில் எந்த முக்கியமான காரியத்திற்காக, ஆசிரியர்களுக் கேற்பட்டுள்ள எந்தக் குறையைத் தீர்ப்பதற்காக, அல்லது ஆரம்பக்கல்வி முன்னேற்றத்திற்கு எந்தத் திட்டத்தைச் சொல்லுவதற்காக, அல்லது இருக்கின்ற திட்டத்தை ஆதரிப்பதற்காகவா, அல்லது கண்டிப்பதற்காகவா, என்றெல்லாம் அந்தக் குறிப்பில் ஒன்றும் காணப்படவில்லை. அக்குறிப்பில் காணப்படுவதெல்லாம் (1) மகா நாட்டிற்கு ஆரம்ப ஆசிரியர்பால் அன்பும், அனுதாபமும் கொண்டுள்ள பெரியோர்களை அழைப்பது, (2) மாவட்ட ஆரம்பாசிரியர் சங்கம் நிறுவுவது என்பதுதான்.

மந்திரி மாதவனார் முதல், மண் வெட்டும் மன்னார் சாமி வரையில் ஆசிரியர்பால் அன்புகொண்டுதான் இருக்கிறார்கள். இந்த நாட்டில் யாருக்கும் ஆசிரியர்பால் அன்பில்லாமல் இல்லை. எல்லோருக்கும் ஆசிரியரைக் கண்டாலே அன்புமட்டுமல்ல, ஆண்டவனென்றும், கையெடுத்துத்தான் கும்பிடுகின்றார்கள். நம்மீது அன்பில்லாது யாராவது இருப்பாரேயானால் அன்போடு பேசுவதற்கு ஆட்கள் தேவைப்படும். நம்மீது அன்புள்ள அன்பர்கள் பேசுவதற்காக மாநாடுத் தேவையில்லை.

மகாநாட்டில் மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம் நிறுவப் படப் போவதாக குறிப்பிட்டிருக்கின்றது, அரசாங்க ஜீ. ஓ. 416, ஜில்லா போர்ட்டு, பஞ்சாயத்து, முனிஸிபாலிடி, பள்ளி ஆசிரியர்கள், தனித்தனியாக யூனியன்கள் அமைக்க அனுமதி தரப்படுகிறதே தவிர, எல்லோரும் சேர்ந்து ஜில்லா யூனியனாக சேர்த்து அமைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்படவில்லை. சமீபத்தில் சட்ட சபையில் ஆந்திரா ஆசிரியர் சம்மேளனத்தை ஏன் அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்று கேட்ட கேள்விக்குக் கல்வி மந்திரியார், "அது அரசியலில் ஈடுபடுகிறது அதனால் அங்கீகரிக்கமாட்டோம் என்கிறார்." மந்திரியாரின் நோக்கம் எல்லாம் ஆசிரியர் சங்கங்களை ஜில்லாவாரியாகவும், மாகாணவாரியாகவும் ஒன்றுபடுத்தக் கூடாது, ஒன்றுபடுத்தினால் இந்த ஆசிரியர் சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து அரசியல் சங்கங்களாக மாறி தற்போதுள்ள ஆட்சி பீடம் அசையும்படி, தேர்தல் காலங்களில் ஏதாவது இடையூறு ஏற்படுத்துமோ என்ற ஐயம் தான், ஜீ. ஓ. நெம், 416-ன்படி சங்கங்கள் தனித்தனியாக இருக்க வேண்டுமென்கிறார் மந்திரி மாதவனார்,

ஆட்சியாளர்களின் கருத்திற்கு மாறாக, அண்மையில் காரைக்குடியில் நடக்கவிருக்கும் இராமநாதபுரம் மாவட்ட ஆரம்பாசிரியர்கள் மகா நாட்டில் அரசாங்க உத்தரவை எதிர்த்து ஜில்லா சங்கத்தை நிறுவுவதற்குத் துணிவுடன் மகாநாட்டு நிர்வாகஸ்தர்கள் முன் வருவார்களா என்பது ஒரு முக்கிய பிரச்சனை. அப்படிச் சிலர் முன் வருவார்களானால், மற்ற ஆசிரியர்கள் அவர்கள் தீர்மானத்தை ஆமோதித்து அதனால் ஏற்படும் துன்பங்களுக்கு ஆளாகி, செயலாற்ற துணிவார்களா என்பது மற்றொரு முக்கிய பிரச்சனை. மகா நாட்டைக் கூட்டி "அரசாங்கத்தார் 416 ஜீ. ஓ. வை ரத்து செய்து புதியதாக ஏற்படுத்தப்பட்ட ஜில்லா சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று," ஓர் தீர்மானத்தை மட்டும் கரகோஷத்தினால் நிறைவேற்றிவிட்டால், அதனால் ஆசிரியர்கள் என்ன பயனை அடைய முடியும். ஜில்லா செயற்குழு நடை முறையில் ஒன்றும் செயலாற்

ருமல், "ஆண்டிகள் மடம் கட்டக் கூடியது" போல், மகாநாட்டில் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு மகிழ்ந்துவிட்டு, பிறகு செயலாற்ருமல் மறைந்து விடுவதில் பிரயோஜன மென்ன? வந்த ஆசிரியர்களும் ஆலயத் திருவிழாக்களில் மக்கள் கூடி மகிழ்ந்து கலைவதுபோல், மகா நாட்டில் கூடிக் கலைவதில் பிரயோஜனமென்ன ? தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கும், கூடிக் கலைவதற்குந்தானு மகா நாடுகளைக் கூட்டுவது.

1947 மார்ச்சு 1, 2 தேதிகளில் சென்னையில், சென்னை மாகாணம் முழுவதும் பற்பல ஜில்லாக்களிலுள்ள ஆசிரியர்கள் ஆயிரக்கணக்காக திரண்டு எழுந்து ஓர் அரிய மகா நாட்டைக் கூட்டினர். ஆதாரச் சம்பளம் ரூ. 50-க்குக் குறையாமல் ஆட்சியாளர்கள் உடனடியாக உயர்த்திருலல்லாது, ஆசிரியர்கள் காந்தியடிகள் வகுத்துக் காட்டிய அஹிம்சா முறையில் மாகாணம் முழுவதும் வேலை நிறுத்தம் செய்வதென ஏக மனதாக ஒரே குரலுடன் அரசாங்கமே அதிர்ச்சி யடையும்படியான முறையில் முழக்கம் செய்தனர்.

ஒரே கருத்து, ஒரே குறிக்கோள், ஒரே தீர்மானம், ஒரே ஓசை, பத்திரிகைகள் பத்திபத்தியாக எழுதின. பொதுமக்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி ஆசிரியர்களுள் இவ்வளவு ஒற்றுமை யிருக்கிறதா என ஆச்சரியப்பட்டனர். ஆசிரியர்களின் ஆரவாரம் ஆட்சியாளர்களைப் பணியச் செய்தது. அடுத்த மாதமே ஆசிரியர்கள் ஊதியம் ரூ. 20–லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டது. அன்று ஆசிரியர்கள், ஜாதி உணர்ச்சி, மதப்பற்று, கட்சிக் கொள்கை, சுய நலம், எல்லாவற்றை ஒழித்துக் கட்டினர், ஒன்றுபட்டனர். உள்ளத்தில் பிறந்தது வீர உணர்ச்சி, அந்த உணர்ச்சியின் காரணமாக ஒரே தீர்மானம், ஒரே குறிக்கோள் உடனடியாக வெற்றி பெற்றது.

அத்தகைய வெற்றிகரமான மகாநாட்டை 1947–ல் நடத்த முன்னணியில் நின்றதுமட்டுமல்ல, பொருளுதவியும் தந்தது, சென்னை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கம். எய்டெட் பாடசாலைகள் மட்டுமல்ல, ஜில்லா போர்ட்டு, முனிசிபல், பஞ்சாயத்து, எல்லோரையும் ஒன்று திரட்டியது. வெற்றிகரமாக மகா நாட்டை நடத்தியது.

வெற்றிகரமாக நடந்த மாகாண மகா நாட்டைக் கண்ட சில சுயநலமிகள், விளம்பர விரும்பிகள், ஆசிரியர் எல்லாவித ஆசிரியர்களைச் சேர்த்து ஐக்கிய சென்னை மாகாண சங்கத்தை உருவாக்காமல், பிரிவு மனப்பான்மை கொண்டு முனிசிபல், ஜில்லா போர்டு, எய்டெட் யூனியன்களாக, சம்மேளனங்களாகப் பிரித்துக்கொண்டு, தலைவர்களாகவும், காரியதரிசிகளாகவும் அவரவர்

கள் இஷ்டத்திற்கு ஓர் யூனியனை விளம்பரப்படுத்திக் கொண்டு விழாக்களையும், மகா நாடுகளையும், யூனியன்களைப் பிரித்து நடத்தி வருகின்றார்கள்.

இத்தகைய பிரிவு மனப்பான்மை, சுயநல மனப்பான்மை ஆசிரியர்களுக்குள் நாளுக்கு நாள் வளர்ந்து வரும்பொழுது, வளர்ந்த யூனியன்கள் வீழ்ச்சியடைவதில் ஆச்சரிய மொன்று மில்லை.

ஆனால் காரைக்குடியில் எய்டெட், ஜில்லா போர்டு முனிசிபல், பஞ்சாயத்து, எல்லாவித பாடசாலை ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி மகாநாடு, கூட்டுவதைக் காண மிக மகிழ்ச்சி யடைகின்றோம். இம்மாதிரி பல ஆசிரியர்கள் ஒன்றுபட்ட மகா நாடுகள் ஒவ்வொரு ஜில்லா வாரியாக நடைப்பெற வேண்டு மென்பது நமது அவா. இந்தக் காரைக்குடி மாநாடு மற்ற ஜில்லா ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக இருக்குமென்று நம்பு கின்றோம்.

தற்போதுள்ள புதிய இந்திய யூனிய சட்டத்தின் அடிப் படையான கொள்கை, "ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்தரத் துடனும் சுயேச்சையுடனும் தன் கருத்தைப் பகிரங்கமாகப் பேசவும், எழுதவும், வாழவும் சமவுரிமை அளிப்பதாகும்." அத்தகைய உரிமை பம்பாய் மாகாண காங்கிரஸ் சர்க்கார். ஆசி ரியர்களுக்கு அளித்திருக்கிறது. அது மட்டுமல்ல தங்களுக்குப் பிரியமான அரசியல் கட்சிகளில், சங்கங்களில் அங்கத்தினராக சேர்ந்து கொள்ளவும், சமுதாய சீர்திருத்தச் சங்கங்களில் பங்கு கொள்ளவும், செயலாற்றவும் உரிமையையளித்திருக்கிறது. அத் தகைய உரிமையை நமது காங்கிரஸ் சர்க்கார் நமக்கு அளிக்க வில்லை. இந்த உரிமையை அடையும் வகையில் இந்தக் காரைக்குடி மகாநாட்டில் ஓர் முக்கியமான தீர்மானம் நிறை வேற்றப் படுவதோடல்லாமல், அவ்வுரிமைய சீக்கிரம் ஆசிரியர் சமூகம் அடைவதற்குண்டான வழி வகைகளை வகுக்க வேண் டும். இன்று ஆசிரியர்களுக்குள்ளே பலர் குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்ள இந்த உரிமை மிக மிக முக்கியமானது.

இதை இராமநாதபுரம் ஆசிரிய மகாநாடு நிர்வாகஸ்தர்கள் முக்கியமாக கவனிப்பார்களென்று நம்புகின்றோம்.

ஆசிரியர் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் எதற்கு? சங்கங்கள் தேவை, சங்கம் நடத்துவதற்குச் சட்ட திட்டங்கள் தேவை. அதை ஆசிரியர்களே செய்துக்கொள்ள லாம். இன்றுள்ள காங்கிரஸ் மகா சபையை எடுத்துக்கொள் வோம்; அது யாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது? நல்ல தொண்டு நாட்டிற்குச் செய்தது, தானாகவே வளர்ந்தது.

நாட்டிற்கு நலன் தேடும் சங்கங்கள் தானகவே வளரும். மக்கள் நலத்தில் நாட்டங் குறையும் சங்கங்கள் தானகவே அழியும்; இது இயற்கை.

ஆரம்பக் கல்வி சம்பந்தமான சீர்திருத்தங்களைப் பற்றி, ஆசிரியர்கள் சமுதாயத்தில் ஏற்படும் குறைகளைப் பற்றி, பேசவும், ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்துக்கொள்ளவுமே ஆசிரியர்கள் சங்கங்கள் தேவை. அதுவன்றி அரசியலாரும், ஆட்சியாளர்களும் ஆரம்பாசிரியர்களை கலந்து ஆலோசிக்காமல் தாங்கள் ஏற்படுத்தும் சட்ட திட்டங்களை, கல்விச் சம்பந்தமான சீர்திருத்தங்களை, அப்படியே ஆமோதிக்க தலையாட்டி பொம்மைகளைப் போல் சங்கங்களில் படிக்கும் அரசாங்க உத்தரவுகளுக்கும், சுற்றறிக்கைகளுக்கும் தலையாட்டிக்கொண்டிருக்க அடிமை ஆசிரியர் சங்கங்களே தேவையில்லை.

ஆசிரியர் சங்கங்கள், தலையாட்டி பொம்மைச் சங்கங்களாகவும், அடிமைச் சங்கங்களாக மட்டும் தான் இருக்க வேண்டுமென்று அரசியலார் கருதுவார்களானல் ஆசிரியர் சங்கங்களை கலைத்து விடட்டும். டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கும் சனிக்கிழமை தோறும் ஊர் ஊராக ஊர்வலம் வந்து சங்கங்களில் தலைமை வகிக்கும் தொல்லையும் நீங்கும்; ஆசிரியர்களுக்கும் கூட்டத்திற்கு வரப்போக வண்டிச் செலவும், சரீர சிரமமும் மிச்சமாகும். இதை ஆட்சியாளர்கள் செய்வார்களா?

ஆசிரியர்களுக்கு, எழுதும் உரிமை வழங்கப் படுமானல், ஆசிரியர் சங்கங்கள் அடிமைச் சங்கங்களாக காட்சியளிக்காது. ஆசிரியர்களுக்கு உற்சாகமும், உணர்ச்சியும் ஏற்பட்டு ஆட்சியாளர்கள் கொண்டுவரும் கல்வித் திட்டங்களை ஆராய்ச்சி செய்வார்கள். நல்லவைகளை ஏற்று நடை முறையில் கொண்டு வருவார்கள். முரண்பாடன விஷயங்களை ஆட்சியாளர்களுக்கு விளக்கித் திட்டங்களைத் திருத்தியமைத்து, நாட்டின் கல்வி வளர்ச்சியில் நாட்டங் கொண்டு நல்லதோர் தொண்டு செய்ய ஆசிரியர்கள் ஊக்கங் கொள்வார்கள். நாட்டில் பாமர நோய் ஒழிந்து கல்வி நன்ருக மக்களிடையே நாளுக்கு நாள் வளரும். இதை ஆட்சியாளர்கள் சிந்திக்கவேற்படும். உடனடியாக சங்கங்களுக்கு விதித்திருக்கும் ஜீ. ஓ. க்களை ரத்து செய்து, ஆசிரியர்களை அடிமைப் படுத்தும் முறைகளை கை விட்டு, ஆசிரியர்களையும் அறிவுள்ள மக்களாக எண்ணி, சுதந்திர ஆட்சியில் அவர்களுக்கும் பேசவும், எழுதவும் உரிமைத்தந்து நாட்டின் கல்வியின் முன்னேற்றத்திற்கு உழைக்கும்படி ஊக்கிவிப்பார்களென்று நம்புகின்ருேம்.

மதிப்புரை MAY 1950 MADRAS

உணவு நெறி

இந்தப் புத்தகத்தில் மக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய தினப்படி உண்ணும் ஆகாரத்தில், விஞ்ஞான முறைப்படி, பதார்த்த முறையிலேயே வைத்திய நுணுக்கமும் அமைந்திருக்கிறது. குறைந்த செலவுசெய்யக்கூடியவர்களும் நிறைந்த பலனை அடையலாம்.

மேலும், விஞ்ஞான முறைப்படி ஏழு நாட்களுக்கும் கிரகங்களின் அமைப்புப்படி, இன்ன பொருளில் இன்ன ஜீவசத்து (Vitamin) இருக்கிறது. என்பதை யுணர்ந்து, வாததேகி,பித்ததேகி இதை யிதை உண்ண வேண்டு மென்றும், இன்ன தேகி என்பதை எளிதில் அறிந்து கொள்ளும் விதமும், இன்ன ரோகமிருப்பின் இன்ன உணவை மாற்றிச் சாப்பிட வேண்டு மென்பதும் "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" என்ற வள்ளுவர் வாக்கின்படி மிக லேசாக கிடைக்கக் கூடிய, எல்லோருக்கும் தெரிந்த கிரைகளும், காய் கறிகளும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

அன்றியும் ஆசிரியர்களுக்கும், படிக்கும் மாணவர்களுக்கும் ஞாபக சக்தி குறையாதிருக்க, அதற்கு வேண்டிய ஆகாரமும், அவரவர்களே செய்து கொள்ளக் கூடிய மருந்து முறைகளும் அமைத்து எழுதப்பட்டிருக்கிறது.

மேலும், மூளை உழைப்புள்ளவர்களுக்கும், தேக திடமில்லாமல் தாது பலம் குறைந்தவர்களுக்கும், உணவு முறையிலேயே மருந்தும் இருக்கிறது.

ஆகவே, மக்கள் பிணியும் துர்ப்பலமும் நீங்கி தேகபலமும், நீண்ட ஆயுளும், மனோசக்தியும், ஆத்ம லாபமும் பெற இந்நூல் மிக மிக முக்கியமானதாகும். இது ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அவசியமானது. இதன் விலை அணு 0-8-0. இதை எழுதியவர் தமிழ்ப் புலவரும், தலை முறை தலை முறையாக வைத்தியக் குடும்பத்தைச் சேர்ந்தவருமாவார்.

கிடைக்குமிடம்.

சிவ. முருகேச செட்டியார்.
தமிழ்ப்புலவர்
39. சவுரிமுத்து தெரு.
மண்ணடி, சென்னை—1

வளர்ந்த யூனியன்கள் வீழ்ந்ததேன்?

(சி. பாலசுப்பிரமணியம்—காரியதரிசி, பென்னலூர், ஸ்ரீ பெரும்பூதூர் P. O)

ஆசிரியர் யூனியன்களின் வளர்ச்சி: சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு தாலுக்காவிலும், மானேஜ்மெண்ட் வாரியாக பல ஆசிரிய யூனியன்கள் தோன்றி பணியாற்றி வந்தன. அவைகள் நிறுவவும், வளர்ச்சியடையவும் தாலுக்கா கல்வி அதிகாரிகள் உறுதுணையாகவிருந்தனர். யூனியன்களின் அபிப்பிராயங்களையும், கோரிக்கைகளையும், வரவேற்று கௌரவித்தார்கள். அரசியல் பிரச்னைகளிலிருக்கும் விஷயங்களுக்கும் மறைமுகமாக ஆலோசனை அளித்தும் வந்தனர். குறைகள் பல நீங்கின, கேட்டவைகளுக்கும் ஜவாப்பு பிறந்தது. ஒவ்வொரு யூனியனும், அதன் வேலைகளை திங்கள் வெளியீடுகளிலும், செய்தித்தாள்களிலும் வெளியிட்டு வந்தன. ஆனல் ஒவ்வொரு யூனியனும் பேனுமுனை நண்பர்களாக மாலை மதியம் போல் வளரலாயின. நன்மை அடைவதற்காகவே அந்நாள் அரசு கிணற்றுத் தவளைகளாயிருந்தவர்களை ஆசிரியர்களை தூண்டிவிட்டார் போலும். எனவே ஆசிரியர்கள் விழிப்புப் பழத்தை உண்டார்கள். அப்பழத்தை உண்டதால் சிந்தனை மேலோங்கியது. கல்வி விதியிலுள்ள குறைகள், மானேஜ்மெண்டில் மலிந்து கிடந்த எண்ணற்ற குறைபாடுகள், தன் மானம் காத்தல், புரட்சிக் கல்வியில் நாட்டம், வெளிநாடுகளின் கல்வி வளர்ச்சியில் ஆராய்ச்சி அரசியலில் ஆசிரியர் கண்ணோட்டம், இன்னோரன்ன பிறவிஷயங்களையும் ஆராய முற்பட்டது. வாழ்வு வளம் பெற திட்டங்களையும் எட்டிவிட்டனர் ஆசிரியர். கூண்டு கிளி போல குறுகிய தனி இன மனப்பான்மை கூடாதென்று உணர்ந்து எல்லாவகை ஆசிரியர்களுக்கும் சேர்ந்த தாலுக்கா, ஜில்லா ஆசிரிய சம்மேளனங்கள் தமிழகம் முழுதும் அமைக்கப்பட்டன. ஆனல் இவைகள் அரசியல் அங்கீகாரம் ஆகாதவை.

இருந்த போதிலும் அங்கீகாரம் பெற்ற சங்கங்களைப் போலவே சட்ட திட்டங்களுடன் சிறந்திருந்தன. அமைச்சர் முதல் அரசாங்க அலுவலர்

வரை எண்ணற்றவர்கள் தலைமை தாங்கியும் சொற்பொழிவாற்றியும் சங்கங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டு வந்தார்கள்.

வட்டத்திற்கு வட்டம் மாறுபட்ட திட்டங்களும் வேறுபட்டக் கருத்துகளும் யூனியன்களில் தோன்றலாயின. எதை ஏற்று நடத்துவதென சந்தேகங்கள் பிறந்தன. அவ்வமயம் ஆசிரியர்களின் ஒன்றுபட்ட குரலை அரசியலாருக்கு அறிவிப்பான் வேண்டி ஆசிரியர்களிடையே விழிப் புணர்ச்சி வேகமாய் பரவி வந்தன. தாலுக்காக்களிலும், ஜில்லாக்களிலும் பல உணர்ச்சியாளர்கள் ஒற்றுமைக்கான வழிகளை வகுத்து வந்தார்கள். சமூக உணர்ச்சியும், சமத்துவமும், அரசியல் கோரிக்கைகளும், வலுத்து வந்தன. மாகாண நீதியில் முயற்சிகள் செய்வதென்று பலர் முன்னணியில் வந்தனர். அதன் அவசியத்தை மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பி, வலியுறுத்தப் பட்டன. அதன் பயனாக 1947 மார்ச்சு 1, 2, தேதிகளில் பொதுமக்களும், பத்திரிகையாளர்களும், வியப்புறும்படியும் அரசியலார் அதிர்ச்சியடையும் வண்ணமும் சென்னையில் மாகாண ஆசிரியர்கள் ஒன்று கூடினர். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை காந்தியவழியில் சென்று அறப்போர் நிகழ்த்திப் பெற முயற்சிக்க வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்தனர். அவைகளை அமைச்சர்களுக்கும், மற்றையோர்களுக்கும் விளக்கிக்காட்டி நியாயமான கோரிக்கைகளை ஜனநாயக வாழ்வை விரைவில் உறுதித்தருவதின் அவசியத்தை வலியுறுத்தப்பட்டன. இதற்கிடை மகாணசம்மேளனத்தைப்பலப்படுத்தவும் தமிழ் நாடு ஆசிரியர் சம்மேளனம் அமைத்தும், அவை செயல் படுவதற்கான ஆக்க வழிகளையும் உண்டு பண்ண முயற்சிகளும் நடந்து வந்தன.

தமிழ் நாடு ஆசிரியர் சம்மேளனத்தின் ஆண்டுநிறைவு விழா சென்ற வருஷம் விழுப்புரத்தில் நடந்தது. இவ்வாண்டு திரு. என். எஸ் வெங்கடேஸ்வரன் முயற்சியால் மன்னார்குடியில் நடக்க விருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை அன்னவர் செய்து வருகிறார். அவருடைய முயற்சிக்கு தமிழ் நாட்டு ஆசிரியர்கள் ஆதரவு அளிக்கவும, ஒவ்வொரு யூனியனும் அவரிடம் தொடர்பு கொண்டு வேண்டியதைச் செய்யுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன். கடமையை உணர்ந்து உழைப்பார்களுடைய சக்தி பின்னுக்கு இழுத்துக் கொண்டு போகமற்படிச் செய்வார்களாக.

சங்கங்களின் நிலை:— மாகாண மாநாட்டிற்குப் பிறகு சங்கங்கள் சாதித்த, சாதிக்கும செயல்கள் என்ன? இப்பொ

மூது தாலுக்கா யூனியன்கள் இருக்கின்றனவா? ஜில்லா சம்மேளனங்கள் தமிழ் நாடு சம்மேளனம் பெயரளவிலேயே தானே உள்ளன. சுதந்தரம் வந்த பிறகு அடக்கு முறைகள், கட்டுப்பாடுகள் முதலியன புகுத்தி நலம் நாடி உழைப்பவனை மாற்றலன் என்று மடக்கப் பார்க்கிறார்களே! அதிகாரிகள் தனி மனிதனை ஒடுக்குவதும், வலியவன் எளியவனை மடக்குவதும் சகஜமாகி விட்டதே. சும்மா இருப்பது சுகம் அல்லவா? என்ற பலவாறான முடங்கல்கள் குவிகின்றன. மனிதனுடைய உரிமையை மனிதனே கொள்ளை கொள்கின்றான். ஊமைகளாய் வாய்ப் பேசாது எதற்கும் தலையாட்டி, கைகட்டி நிற்க வேண்டுமென்பது உரிமையை நசுக்குவனவாகும். அவ்வாறு விளங்குகின்றவர்கள் சமூகத் துரோகிகளே ஆவர்.

அவரவர் மனக்கருத்துப்படி நடக்கவும், வாழவும் உரிமை உண்டு. ஒன்றைப்பற்றி உயர்த்தியோ தாழ்த்தியோ, புகழ்ந்தோ, இகழ்ந்தோ பேச ஒருவனுக்கு உரிமையுண்டு. அஃதேபோல் நலம் செய்வதற்கோ, கேடு செய்வதற்கோ, வாழ்வதற்கோ, வீழ்வதற்கோ, உரிமையுண்டு. ஆனால் அவை அளவு படுத்தப் பட்டிருக்கின்றன. ஒடுக்கப்பட்டுமுள்ளன. நியாயமான அளவில் உரிமையைப் போற்றி பாதுகாப்பவனே நாகரிகமுடையவனாவன். டாக்டர் ஜான்சன் என்பவர் நினைத்ததைச் சொல்லுவதற்கும், அதை மற்றவர் மறுத்துப் பேசி மட்டந்தட்டுவதற்கும்" உரிமை உண்டு என்று கூறுகிறார். இழுக்கு வராமல் மக்கள் நலம் காண சிறந்த வழி காட்டி, வாழவைக்க ஒவ்வொருவரும் முயலுவதே அறிஞர் கடமை. ஆகையால் சமூகத் தொண்டில் உழைக்க உரிமையுண்டு.

தனக்கோ, பிறருக்கோ தீங்கு இல்லாதிருத்தல் வேண்டும். தீங்கு வரும் வழியில் கொண்டாடும் உரிமையை அன்பால் தடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் உரிமையை உள்ளவாறு உணர்ந்து நடந்தால் இன்னல்கள் உண்டாகாது. எனவே நேர்மையுணர்ச்சி யுடையவர்கள் கொந்தளிப்பான நிலையைப் போக்கி,மறுமலர்ச்சி அடைய, இழந்த வீரஉணர்ச்சியை மீண்டும் பெற, அவர்களுக்கு உத்வேகத்தைத்தந்து உதவுவது தானே அழகு, கடமையுங்கூட. வீறு கொண்டு முன்னாளில் இடி முழக்கஞ் செய்த ஒற்றுமைக் கழகங்களின் உறுப்பினர்கள் எங்கே போயினர்? உறக்கத்தை விட்டு சென்னை மேல் சட்டசபையில் ஆசிரியர் தொகுதிக்கு பட்டதாரிகளும், செகண்டரி கிரேட் ஆசிரியர்களும், செகண்டரி பள்ளிகளிலேயுள்ள பிரைமரி ஆசிரியர்

களும், வோட்டர்களாக பதிவு செய்துக் கொள்ள சென்னை அரசாங்கம் அனுமதிக் கொடுத்திருக்கும் சலுகையை எல்லாப் பாடசாலைகளிலும் வேலை செய்யும் எல்லாவகை ஆசிரியர்களுக்கும் வழங்க வேணுமாய் சர்க்காரைக் கேட்டுக் கொள்ள கிளர்ச்சி செய்வார்களாக.

கிளர்ச்சி—எங்கு பார்த்தாலும் மக்களிடையே ஏன் கிளர்ச்சிகள் தோன்றுகின்றன? மக்களுக்கு வாழ்க்கையில்லை, வாழ்க்கையில் வளமில்லாமையே காரணமாகும். தாங்கள் அடைந்து வரும் துன்பங்கள் நீங்குவதில்லை. பெற நினைக்கும் இன்பங்கள் கிடைப்பதில்லை. உள்ளத்தே போதும் என்ற மனப்பான்மை இப்போது இருக்க முடியாது. முன்காலத்தில் சிலர் செல்வத்தில் திகழ மற்றையோர்கள் அவர்களுக்கு அடங்கிக் கிடப்பார்கள். நான் ஏன் இன்புறக் கூடாது? ஒரு சிலர் மட்டும் அவ்வாறு இருப்பானேன்? என்று ஒவ்வொருவரும் கேட்கின்றார்கள். ஆகவே வாய்மூடி கைகட்டி சும்மா இருந்த காலம்;- விதியை எண்ணி வாளா இருந்த காலம் மலையேறி விட்டது.” துன்பப் படுகிறவனும் இன்பம் அடையாதவனும் கிளர்ச்சி செய்ய முற்படுகிறான். இக் கிளர்ச்சி பல வகையாக மலர்கிறது. முக்கியமாக உணவு, உடை, உறையுள் இம் மூன்றிலும் தோன்றுகிறது. இத்தக் கிளர்ச்சி இயற்கையே. நியாயமும் தானே. ஏழை வருந்தி, மனச் சோர்வு அடைய, மற்றையோர் உண்டு உடுத்து உப்பரிகையில் வாழ்வு நடத்துவது நல்லதா? புழுக்கமுறும் ஏழை கிளர்ச்சி செய்கிறான். ஆறுதல் இல்லாமையால்-படித்தவனும் படியாதவனும் கூட கிளர்ச்சி செய்கிறான். ஏன்? உலகியப் பொருள்களுக்கும் அறிவு பெறுவதற்கும் கல்வித் தேர்ச்சிக்கும், அரசியலில் பங்கு பெறவுமேயாகும். இது இன்றைய காட்சி. உலக மெங்கும் இத்தகைய கிளர்ச்சிகள் வலுத்து வருகின்றன. பண்டைய பெருமை உடையவர்கள் என்று பெருமைப் பேசிக் கொள்ளும் ஆசிரியர்கள் அரசியலில் சிரத்தைக் கொள்ளவும் பொருளாதாரத்திலும் பக்குவ நிலை காண என்ன செய்திருக்கின்றார்கள். தனித்த மனிதன் யாதும் செய்யான். அவன் பேச்சு அம்பல மேறாது. மனித உள்ளத்தே கலந்து வாழ வேண்டும் என்ற உணர்வு பல ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டதொன்றாகும். கூட்டு வாழ்வை மனிதன் விரும்புவதைப் போல சங்கங்களே வேண்டியதை அளிக்கக்கூடியது. ஆகவே நலம் காண கூட்டு முறையிலே கிளர்ச்சி தேவையல்லவா? அக் கிளர்ச்சியால் தனக்கோ பிறருக்கோ எவ்வகையாலும்

தீங்கு உண்டாகக் கூடாது என்பது மிக மிக முக்கியம். இவைகளை எல்லாம் எண்ணு மா உள்ளம்?

இனி சங்க நிர்வாகஸ்தர் களைப் பற்றி கவனிப்போம். இவர்கள் குண சீலராகவும், உண்மை உழைப்பாளிகளாக வும் அனைவருக்கும் ஒரு எடுத்துக் காட்டாகவும் விளங்க வேண்டியவர்கள். கூட் டங்களில் விவாதித்து முடிவு கட்டின தீர்மானங்களை சம்பந் தப்பட்டவர்களுக்கு காலதா மத மின்றி அனுப்பி சிரத்தை யுடன் பரிகாரம் தேட முயன்று அனைவரின் நம்பிக் கையைப் பெற வேண்டியவர் கள். ஆசிரியர்களுடைய மேம் பாட்டிற்காக அவர்களுடைய சக்தியை காந்திய வழியில் உப யோகிக்கலாமேயன்றி தங்கள் கட்சிக்குப் பயன் படுத்திக் கொள்ள திட்டமிட்டு மறை முகமாக வேலை செய்வது நேர் மை உணர்ச்சியை தூண்டு வதாகாது. அவரவர் கருத்தை வெளியிடுவதை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதை அப்படியே பின் பற்ற வேண்டு மென்று நிர்பந்திப்பது மற்ற வர் உரிமையைப் பறிப்பதா கும். முறையற்ற செயலுக்கும் கபடதனத்திற்கும் தானே மற்றவர்களை தங்கள் கைப் பாவைகளாக ஆக்கிக் கொள்ள வேண்டும்,, ஒருவனுடைய சிந் தனையை அழித்தல் பாதையில் திருப்பிவிடுவது பயித்தியத் தின் சிகரமல்லவா? வெளிப் படையாக எந்தப் பிரச்சனை யையும் ஆராய விடாமல் தட் டிக் கழிப்பது முறையற்ற செயல் ஆகாதா? அதனால் ஆசிரியர், உள்ளத்தில் அவ நம்பிக்கை என்னும் வித்தை ஊன்றுவதாகாதா. இதனால் மனக்கசப்பு என்ற நச்சு மரம் வளருமே. ஒற்றுமையைக் குலைய வைக்கும் சீர்கேடான நிலைமை வளர்ந்து சமூகமே அழிந்து விடும். எனவே தவறான பாதையில் போகிற வர்களை திருந்தாது உடந்தை யாக இருப்பவர்கள் தங்களுக் கும் பிறருக்கும் அழிவைத் தேடிக் கொள்ளும் சூதாட்டக் காரர்களாவார்கள்.

இப்போது, வேகமாகப் பரவி வந்த ஒற்றுமை உணர்ச்சி வீழ்ந்துள்ளது. மூலை முடுக்குகளிலெல்லாம் பேரிடிபோல் ஒலித்து வந்த 'ஐக்கியம்' என்ற முழக்கம் மறைந் தொழிந்து வருகிறது. வலுத்து வந்த கட்டுப்பாடு சின்ன பின்னமாகிறது. ஆசி ரியர்களுடைய விழிப்பைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அரசியலார் கூட நம்மாட்டு நிலவி வரும் இணக்கமான ஒத்துழைப்பு இன்மையை அறிந்து, நமது நியாயமான கோரிக்கைகளை பூர்த்தி செய்வ தாக வாக்களித்தும் கூட இப் போது தட்டிக் கழித்து விட் டனர். அஃதுமட்டுமல்ல ஆசி

(14-ம் பக்கம் பார்க்க)

உபாத்திமைத் தொழிலின் உயர்வு

(திரு K. P. கனகராசு. மானேஜர். ஆ. தி. பாடசாலை கணேசபுரம்)

ஆசிரியரின் வேலை:— ஆசிரியரது வேலை இன்னதென்று பலருக்குத் தெரியாது. சிலர் பிள்ளைகளைக் கொஞ்சங் கூட சிரமப்படுத்தாமல் எல்லா விஷயங்களையும் வகுப்புக்கு அதிகமானவைகளையும் தாமே சொல்லிக் கொடுப்பதென்று எண்ணுகின்றனர். இது மிகவும் தவறு. இன்னும் சிலர் வகுப்பில் மாணவர்களின் பாடங்களைத் தமக்குக் குறிப்பிட்ட காலத்தில் ஒப்புவித்துக் கொள்வது தான் தமது வேலையென்று எண்ணி நடக்கிறார்கள் இதுவும் பிசகே. வாசிக்கவும், எழுதவும், கணக்குப் போடவும் யார் சொல்லித் தருகிறார்களோ அவர்கள் தான் உபாத்தியாயர்கள் என்றும், ஆசிரியர்களென்றும் நினைக்கக் கூடாது. எழுதப் படிக்கவும் கணக்குப் போடவும் கற்றுக்கொடுப்பது உபாத்தியாயர் கிரமமாகச் செய்ய வேண்டிய வேலையில் ஓர் அணுவிற்குச் சமானம். பிள்ளைகளின் மனதை பயிற்சி செய்து அவர்களுடைய மனோதத்துவங்களை விருத்திபண்ணி நன்னடக்கைகளை அவர்கள் பின்பற்றும்படி செய்து அவர்களிடத்தில் நல்ல குணங்களை உண்டாக்கி எந்த விஷயத்தையும் தாங்களே சிந்தித்துத் தகுந்தபடி செய்யும் ஆற்றலை அவர்களிடத்தில் ஏற்படுத்தி, அவர்களின் பெற்றோர்களுக்கும் சுற்றத்தாருக்கும் சந்தோஷத்தையும் கொடுக்க என்ன லக்ஷணங்கள் இன்றியமையாதவையோ அவற்றையெல்லாம் உண்டாக்க வல்லவன் தான் ஆசிரியர். ஒருவனைக் கண்ணியமுள்ள ஆளாக்க என்ன

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

ரியர் தொகுதிக்கு ஆரம்பசிரியர்களை வோட்டுரிமை அற்றவர்களாகவும் ஆக்கி விட்டார்கள். எனவே அண்மையில் நடக்க இருக்கும் மாயவரம் மாநாடு அனைவற்றையும் ஆராய்ந்து சங்கங்களின் வளர்ச்சிக்கு திட்டமான வழிவகைகளை வகுத்து, சந்தர்ப்ப வாதிகளை விலக்கி, உள்ள சங்கங்களுக்கு உரு கொடுக்கும் என்று நம்புகிறோம். இம்மாநாடு நாட்டில் நடக்கும் ஏனைய மாநாடுகள் போல் கூட்டிக் கலையும் மாநாடாய் முடியாதவாறு கவனித்துக் கொள்ளுமா தமிழகம்?

வேண்டுமோ, அதைச் செய்பவருக்குத் தான் உபாத்தியாயர் என்ற பெயர்தகும். ஒருவனைக் கண்ணியமுள்ளவனாகவும் லோகோபகாரமாயிருக்கும்படியாகவும் செய்யும் தொழில் இலேசானதாகவிருக்குமா? மிகவும் கடினமான வேலையாகத்தானிருக்கும். அத்தகைய வேலையிற்புகுந்து கீர்த்திப்பெற வேண்டுமென்று முயல்கிறவர்களைப் பற்றி நாம் மிகவும் பெருமை பாராட்ட வேண்டியது அவசியமே.

ஆசிரியரின் வாழ்வு:— இதில் பெருமை பெற இடமிருந்த போதிலும் சிலர் உபாத்திமைத் தொழிலில் பிரவேசிக்க இஷ்டப்படுகிறதில்லை. உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டால் உடம்பு கெட்டுப் போகுமென்பது சிலருடைய அபிப்பிராயம். காலை முதல் மாலை வரையில் கத்திக் கத்தித் தீர்க்க வேண்டியதே உபாத்தியாயரின் வேலை என்றும், அதனால் அநேக வித நோய்கள் உண்டாகும் என்றும் எண்ணுகிறார்கள். அம்மாதிரி எண்ணுவதற்குக் காரணம் அவர்கள் உபாத்தியாயரின் உத்தியோகம் இன்ன தென்று உணராமைதான். பள்ளிக்கூடத்தில் காலை முதல் சாயங்காலம் வரை ஒரே கத்தலாய் கத்திக் கொண்டிருந்தால் உடம்புக்குக் கெடுதல் தான். பிள்ளைகள் விஷயங்களை தாங்களே ஆராய்ந்து தெரிந்து கொள்ளும்படி செய்வது உபாத்தியாயருடைய கடமையாதலால், இந்த வேலையின் சிரமம் உபாத்தியாயருக்கும் பிள்ளைகளுக்கும் சமமாயிருக்கும். சிறு பிள்ளைகள்படும் அவ்வளவு சிரமம் உபாத்தியாயர் பட்டால் அதனால் உடம்பு கெட்டுப் போகுமா? மற்றத் தொழில்களிலிருப்பவர்களைக் காட்டிலும் உபாத்தியாயருக்கு வேலை அதிகமில்லை. இவருடைய வேலையெல்லாம் ஐந்து மணி நேரத்திற்கு மேல் கிடையாது. அதனிடையில் ஓய்வு நேரமுமிருக்கிறது. வியாபாரிகளுக்கு காலை முதல் இரவு பத்து மணிவரையில் வேலை தான்; சாப்பிடவும் நேரம் கிடைக்காது. வக்கீல்களுக்கும் வைத்தியர்களுக்கும் சதா வேலை தான். பொழுது விடிந்தது முதல் அர்த்த ராத்திரி வரையில் கடையில் உட்கார்ந்த இடத்திலிருந்தபடியே வந்தவர்களுக்கு விலை கூறி மனம் களிக்கும்படி பேசி சரக்குகளின் குணத்தை புகழ்ந்து வாங்குமபடி செய்வதிலும், வந்த போதெல்லாம் கட்சிக்காரர்களிடன் பேசிப் பேசி விஷயங்களைத் தெரிந்து கொண்டு கோர்ட்டுக்குப் போய் எடுத்து வாதிக்கும் வக்கீல்கள் பேசுவதிலும், உபாத்தியார் பேச வேண்டியது ஆயிரத்தில் ஒரு பங்கு இருக்குமா? அல்லும் பகலும் மழை என்றும் வெயிலென்றும் பாராது, கூப்

பிட்ட போதெல்லாம் வந்து நோயாளியைப் பார்த்து மருந்து கொடுக்கும் வைத்தியர்களைப் பார்க்கிலும் உபாத்தியாயருக்குச் சரீரசிரமம் அதிகமாயிருக்குமா? வேறு உத்தியோகங்களிலிருப்பவர்களுக்கு ஓய்வு என்பது கிடையாது. உபாத்தியாயர்களுக்கோ வேனிர்கால கோடைகால விடுமுறைகளைத் தவிர வாரா வாராம் ஒன்றை அல்லது இரண்டு நாள் விடுமுறையும் பண்டிகைகளுக்காக அவ்வப்போது வேறு விடுமுறைகளும் உண்டு. ஒருக்கால் அவர்கள் வேலையினால் ஏதேனும் சிரமமடைந்தாலும் அதை பரிகரித்துக் கொள்ள நிரம்ப அவகாசமுமிருக்கின்றது. ஆகையால் இந்த உபாத்தியாயர் உத்தியோகம் உடம்புக்குக்கெடுதியையுண்டு பண்ணும் என்பது தப்பான அபிப்பிராயம்.

அநேகருக்கு உபாத்திமை தொழில் கௌரமானதாகத் தோற்ற வில்லை. சிலர் அந்த உத்தியோகத்தை இகழ்கிறார்கள். என்னடா போயும் போயும் இந்த எழவெடுத்த வாத்தியார் வேலையா? எவ்வளவோ படித்து கடைசியில் பள்ளிக்கூடத்து வாத்தியாராகவோ ஆனாய், வேறு எங்கும் உத்தியோகம் கிடைக்காமலா போய் விட்டது, என்று இகழ்ச்சியாகப் பேசுகின்றனர்.

உபாத்திமை தொழிலின் உயர்வு:— எல்லா உத்தியோகங்களையும் விட உபாத்திமை தொழில் தான் மேம்பாடுடையது, பிரயோசனமானது, இத்தொழிலை விட வேறு சிறந்தது ஒன்றுமில்லை. வக்கீல்களுக்கு ஒரு கேஸை ஜயித்தால் உடனே கீர்த்தி வந்து விடுகிறது. அதே மாதிரி ஒரு பெரும் பிணியை சுகப்படுத்தினால் உடனே வைத்தியனுக்கு 'தன்வந்திரி' பட்டமும் கிடைத்து விடுகின்றது. ஆனால் உபாத்தியாயர் சங்கதியோ அப்படியல்ல. அவர் செய்யும் வேலையின் பலன் அப்பொழுதே தெரியாது. நாட்பட நாட்படத்தான் தெரியும். பாமர ஜனங்கள் உபாத்தியாயரின் அருமை தெரியாமல் மற்றவர்களையே கொண்டாடுகிறார்கள். இவர்களின் அருமை நன்கறிந்தோர்க்குத் தான் தெரியும். உபாத்தியாயரிடம் தான் தேசத்தின் முன்னேற்றமிருக்கிறதென்று கொண்டாடுகிறார்கள். ஆயிரம் பாமரர் புகழ்வதைக் காட்டிலும் கல்வி கற்ற ஒரு பண்டிதன் புகழ்வது பெரிது. ஆகையால் உபாத்தியாயர்கள் சந்தேகிக்க வேண்டியதில்லை.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் ஏராளமாகப் பணம் சேர்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டவர்களாகவே யிருக்கிறார்கள். பணமுள்ளவர்கள் தான் இக்காலத்தில் நல்ல மாதிரியாகக் கௌரவத்தை

யடைகிறார்கள். உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டால் அதில் சம்பளம் குறைச்சல் என்று எண்ணுகிறார்கள். இது உண்மையே.

உபாத்திமை தொழிலில் பிரவேசிக்கிறவர்களின் குணம் சீக்கிரத்தில் மாறி விடுகிற தென்றும் சிலர் சொல்லலாம். புத்தியற்ற பிள்ளைகளுடன் முழுவதும் உழைத்து என்ன சொல்லிக் கொடுத்தாலும் தெரிந்துக் கொள்ளக் கூடாமையைக் கண்டு கோபதாரிகளாய் விடுவார்கள் என்பதும், தாம் பள்ளிக்கூடத்தில் சுய அதிகாரம் செலுத்துவோராகையால் வெளியில் மற்றவர்களிடத்திலும் சம்பாஷிக்கும் பொழுது அலட்சியத்துடனும் கர்வத்துடனும் நமக்கு மிஞ்சினவர்கள் கிடையா தென்றும், மனதையுடனிருப்பார் என்பதும் சிலர் கருத்து. உபாத்தியாயர் ஒருவருடனும் கலக்காமலும் தானுண்டு பள்ளிக்கூடம் உண்டு என்றிருந்தால் அப்படிக் குணம் மாறிப் போகும் தான். ஆனால் அவர்கள் மேன்மேலும் படித்துக் கொண்டும் தம்மினும் பெரியோர்களுடன் பழகிக் கொண்டும் இதர விஷயங்களில் கலந்து கொண்டும் இருந்து வருவார்களானால் மேற் சொல்லிய கெடுதிகள் நேரிடாது.

உபாத்திமை தொழிலின் அனுகூலங்கள்:—உபாத்தியாயருக்கு குறிப்பிட்ட நேரப் படிதான் வேலை. அதாவது காலை ஒன்பதரை அல்லது பத்து மணிக்கு வேலை ஆரம்பித்து மாலை ஐந்து மணிக்குள் முடிகிறது. இதனடுவில் ஒரு மணி நேரம் அவசாகமு மிருக்கிறது. இந்த வேலை ஆரம்பிப்பதற்கு முன்னும் முடிந்த பின்பும் உபாத்தியாயர் தம்மிஷ்டப்படி காலத்தை கழிக்கலாம். மற்றவர்கள் சங்கதி அப்படியல்ல, வர்த்தகர்கள் வக்கீல்கள் இருவர்களுக்கும் நாள் முழுதும் வேலையில்லாமற் போனாலும் யாராவது வரக்கூடும் என்ற எண்ணத்தால் சதாகாத்துக் கொண்டிருக்க வேண்டுமே யொழிய தமக்கு இஷ்டமான வேறு வேலையில் பிரவேசிக்க முடியாது. உபாத்தியாயருக்கு மாத்திரம் சௌகரியம் அதிகம். அவருக்கிருக்கும் அவகாசத்தை பொது ஜன சேவையிலும் மற்ற விஷயங்களிலும் கழிக்கலாம். ஆனால் தற்காலத்திய உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்கு பிரைவேட் சொல்லி கொடுத்து பணம் சம்பாதிக்க ஆசைப் படுகின்றனர்.

இந்தப் பிரைவேட் வைத்து கொள்வதெதற்காக என்ற கேள்வி பிறக்குமானால் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் குறைவாயிருப்பது தான் காரணம் என்று தெளிவாகும். பட்டணங்களில் எல்லா வஸ்துக்களும் கிராக்கி என்பது யாவரும் அறிந்த விஷயம்.

முதலில் கவனிக்கப் பட வேண்டியது வசிக்க இடம். இடத்திற்கு வாடகையோ அதிகம். தமக்கு சம்பளம் வருவதில் மூன்றிலொரு பங்கு வாடகைக்கு போய் விட்டால் மற்ற செலவிற்கு என்ன செய்வது. வேறு விதத்தில் பணம் சம்பாதிக்க வேண்டியவரா கிறார்.

கணக்குத் தப்பாய் போய் விட்டத்தே, பணம் குறைந்து போயிருக்கிறதே, என்ன செய்வது கணக்கெழுதாது விட்டோமோ மேலாதிகாரிக்கு என்ன சொல்வது என்ற பணப்பொறுப்புஇந்தத்தொழிலில் கிடையாது. சில அரசாங்க உத்தியோகங்களில் வேலை செய்வதில் ஒரு நாள் தள்ளுவது "நித்திய கண்டம் பூரணாயுசு" என்பதைப் போல் வெகு கஷ்டம் என்று சொல்லுகிறார்கள். அவ்வளவு சங்கடங்களும் கஷ்டங்களும் இந்த உத்தியோகத்தில் கொஞ்சமுங் கிடையாது. உபாத்தியாயர்கள் தங்களுக்குத் தெரிந்ததை தம்மால் கூடிய மட்டும் சொல்லி வைப்பதைத் தவிர வேறு ஒன்றும் பிசகு செய்ய அவசியமில்லை. சாவகாசம் அதிகமாயிருக்கிற படியால் மேன் மேலும் படித்து அபி விருத்தி செய்துக்கொள்ள இடமுண்டு. உபாத்தியாயருடைய வேலை முழுவதும் பிறருக்கு நன்மை செய்வதே.

ஆகையால் ஒவ்வொருவரும் ஆசிரியர் தொழிலை கேவலமாக எண்ணாது, இத் தொழிலில் ஈடுபட்டும், நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாத குறிகள் அதிகம் என்ற பெயரை நீக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பு:—உபாத்திமைத் தொழிலின் உயர்வை நினையாது' ஊதியத்தைப் பற்றி மட்டும் நினைந்து நினைந்து உருக்குலைந்து வரும் சில ஆசிரியர்களின் உள்ளத்தை மாற்றக் கூடிய முறையில் தோழர் K P கனகராசு சில நல்ல கருத்துக்களை இக் கூட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

நல்ல நீதி

— கோ. துக்காராம் —
ஆசிரியர் — மேமதூர்.

அமுதை ஊட்டி, தன்னை அண்டி வாழும் மக்களை அன்புடன் ஆதரிக்கும் பொன்னியாற்றின் கரையிலே உள்ளது பொன்னேரிக் கிராமம். அழகமைந்த அக்கிராமத்தை நினைத்தால், உடனே "ஜெயக்குமார் கலைக்கூடம்" ஞாபகத்திற்கு வரும். அதைத் தொடர்ந்தாற் போல ஆசிரியர் மணிவண்ணன் ஞாபகமும் உடனே வரும். "ஜெயக்குமார் கலைக்கூடம்" ஓர் சிறிய ஆரம்பப்பள்ளி. ஆனால் வெறும் கல்விச்சாலை மட்டுமல்ல, கலைத்தேவி ஆனந்த நடனம் புரியும் இன்பக் கலைக்கூடம். அதில் பயில்பவர்கள் பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட இளஞ் சிறுவர்கள் கூட்டந்தான். ஆனால் அவர்கள் முற்றுந் தேர்ந்த கலைஞர்கள் என்று தான் கூறநேரிடும். அதில் கற்பது வெறுங் கணிதமும், பாடமும் மட்டுமில்லை. இன்பங் கொடுக்கும் இனிய கீதங்கள், மகிழ்ச்சியூட்டும் நடனங்கள், கண்ணைக்கவரும் கைத்தொழில்கள். அவர்கள் சின்னஞ் சிறுவர்களாகவா இருக்கிறார்கள்? சிறந்த சிற்பிகளாக அல்லவா அமைக்கப்பட்டிருக்கிறார்கள். "சோழர்கள் காலம்! எங்கள் வள்ளுவர் வாழ்ந்த நாள்! தலைச் சங்கக் காலம்! தமிழன் ஆண்ட நாள்!" என்று எப்பொழுதும் ஓதிக்கொண்டிருக்கும் பழமைப்பித்தன் மணிவண்ணன் வசிக்கும் இடம் அல்லவா அது!

ஜெயக்குமாரின் பள்ளித் தோழன் மணிவண்ணன். மணிவண்ணனும், ஜெயக்குமாரனும் எஸ். எஸ். எல். ஸி வகுப்பு வரையில் படித்து வந்தார்கள். மேற்கொண்டு படிக்க வசதியில்லாமையால், மணிவண்ணன் அத்துடன் தனது படிப்பை முடித்து விட்டு, ஆசிரியர் பயிற்சி பெற்று, ஆசிரியனாக வாழ்க்கை நடத்தி வந்தான். ஜெயக்குமார் பி. ஏ. பட்டம் பெற்றான். அவனுக்குப் பணந் தேட வேண்டிய அவசியமில்லை. அவன் வீட்டில் குவிந்துள்ள பணத்தைச் செல விட வழி தேட வேண்டியது தான் அவன் அலுவல். அந்நிலையில் மணிவண்ணன் அவனை அண்டினான். பொன்னேரியிலே ஓர் புதுப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அது சிறு பாடசாலைதான், அது ஆட்சி செலுத்தும் அமைச்சர் முதல் அனைவர் அபிமானத்தையும் கவர்ந்த கண்காட்சிச்சாலை. பல பத்திரிகைகள் அதைப்பற்றி பத்தி பத்தியாக வர்ணிக்க ஆரம்பித்தது. அப்பாடசாலையினால் பொன்னேரிக்கிராமம் பொன்னெழுத்தால் பொரிக்கப்படும்

நிலைமை எய்தியது. கல்விச் சாலை கலைச்சாலை ஆவதற்கு மணிவண்ணன் மட்டும் காரண மில்லை, அவன் ஆசைத் தோழி, ஆருயிர்க் காதலி மணிமொழி யும் காரண மாவாள். எங்கும் பரவியது இவர்கள் பெயர் அல்ல, அதற்கு ஏராள நிதியை வாரியிடும் ஜெயக்குமார் பெயர் தான். இவர்கள் கூலிக்கு வேலை செய்யும் ஊழியர்கள்.

"ஜெயக்குமார் சிறந்த தேச பக்தன்; உண்மைத் தொண் டன்; உயர்குண உத்தமன்! பரோபகாரி" என்று பறை சாற்றினர் மேலிடத்தவர். ஆமாம்! உண்மையிலேயே உழைத்தால் அவ்விதந்தான் சொல்ல வேண்டும். அவன் விரும்பியது பெயர் பரவ வேண் டும் மென்ற ஆசை. தான் செய் யும் தீயச் செயல்கள் மறைய, தேசமெங்கும் தன் பெயர் பரவ வேண்டுமென்ற பேராசை.

அன்று, கலைக் கூடத்தின் ஐந்தாம் வருடக் கொண்டாட் டம். கல்வி அமைச்சரும், மற்ற அதிகாரிகளும், பொது மக்களும் கலைக் கூடத்தையும் அதை நடத்தும் நிர்வாகியை யும் ஆசிரியர்களையும் வாய்க் கொண்ட மட்டில் வாழ்த்திச் சென்றனர், அன்று மாலை.

"மணிவண்ணன்! கலை! கலைக் கூடம் என்று காலங்கழித்துக் கொண்டே போனல் நமது திருமணம்!"

"மணிமொழி! நமது கலைக் கூடத்தில் நூறு கலைச் சிறுவர் களை உற்பத்திச் செய்த பின்பு; நமது கிராமத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவன் இல்லை யென்ற வாக்கியம் உண்டான பின்பு."

"இது போன்று ஒவ்வொரு பாடசாலையின் ஆசிரியர்களும் உழைத்தால், நம் நாடு எவ்வ ளவு முன்னிலையில் நிற்கும்"

"உண்மை! ஆனல் இந்த ஜெயக்குமார் போன்று எல்லா கிராமங்களிலும் ஓர் ஜெயக் குமார் இருந்தால் அவ்விதமே நடக்கும், மணிமொழி! ஒட் டிய வயிறும் கிழிந்த ஆடை யும், அரைவயிற்றுச் சோற்றுக்குத் தாளம் போடும் ஏழை ஆசிரியன்! குரு என் னும் பீடத்திலிருந்துத் தள்ளி, வாத்தி என்னும் அலட்சிய வார்த்தைக்கு ஆளாகி விட் டான். மணிமொழி! மாந்தோப் பிற்குச் சென்று, மாங்கன்று கள் இன்று ஒட்டுக்கட்டுவதில் ஆட்களுக்கு உதவி புரிய வேண்டும். ஜெயக்குமார் என் னைத் தேடிக்கொண்டிருப்பார்" என்று காவிரியாற்றின் கரையை நோக்கி நடந்தான் மணிவண்ணன். மணிமொழி யும் தண்ணீர் கொண்டு வர குளக்கரைக்குச் சென்ருள். ஜெயக்குமார் படித்துறையில் நின்ருன்.

"மணிமொழி உன்னை மணம் புரிய விரும்புகிறேன்.

உன்னைத்தனிமையில் கண்டு பேசவே" என்றான் ஜெயக்குமார்.

"என்ன! தங்களுக்குக்கு எவ்வளவோ இடத்துப் பெண்கள் ஏங்கி தவமிருக்கிறார்கள். நான் ஏழை! மணிவண்ணனும் நானும் மாறாத அன்பு கொண்டிருக்கிறோம்"

"சம்மதிக்காவிடில் நீயும் மணிவண்ணனும் இந்த ஊரை விட்டு ஓட நேரிடும்"

"கலைக்கூடம்"

"மாட்டுக் கொட்டில்"

"வேண்டாம்! அதில் பயிலும் நூற்றுக்கணக்கான குழந்தைகளை மடையர்கள் ஆக்காதீர்கள். மணிவண்ணன் சம்மதித்தால் நான்..."

"மணிமொழி! அவன் சம்மதிக்காவிடில் அவனை இந்த உலகத்திலிருந்தே".

"கொடுமையான வார்த்தைகள்! அவர் நிச்சயம் சம்மதிப்பார்; கலைக்கூடம் காலியாவதைக்காண சகிக்க மாட்டார்"

"மணிமொழி! இன்று மாலை ஐந்தரை மணிக்கு மேல், அந்தத் தோட்டத்திற்கு வா" மணிவண்ணனுக்குத் திருப்தியாக நமது திருமண ஏற்பாட்டைப் பற்றிச் சொல்லுகிறேன்" என்று ஜெயக்குமார் அவ்விடம்விட்டு அகன்றான்.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திர கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்)	100	ரூ	2-8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	1-0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மணிமொழி அந்தத் தோட்டத்திற்குச் சென்று, அங்குள்ள கிணற்றின் மதிலின் மேல் உட்கார்ந்தாள். "காதல் வேண்டுமா? கலைக் கூடம் வேண்டுமா? கலியாணம் வேண்டுமா? அல்லது இந்த ஊரை விட்டு ஓட வேண்டுமா?" என்ற சஞ்சலத்திலே மூழ்கியிருந்தாள். அவளது சஞ்சலத்தைக் கலைத்து ஓர் நல்ல நீதியை; எதிரில் தோன்றிய இயற்கைக் காட்சி சித்தரித்தது.

காலையிலே கிழக்குத் திக்கில் கதிரவனைக் கண்டு களித்தது. பகலவன் உயர உயர தானும் உயர்ந்து உச்சியைப் பார்த்தது. கதிரவன் தாழ்ந்து வந்து மறையும் நிலையில் இருக்கிறான். அதுவும் அப்படியே அசையாது கண்டபடியே நிற்கிறது. அந்தச் சூரிய காந்தி மலருக்குத்தான் எவ்வளவு அன்பு, அந்த ஆதவன் மேல், 'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் வள்ளுவரின் உரைபடி, கதிரவன் தனக்கும், இந்த உலகத்திற்கும் செய்யும் நன்றியை மறவாது, தனது வாழ்நாள் முழுவதும் அவன் தியானத்திலேயே கழிக்கிறது. அந்தக் காட்சி மலராகிய நான், ஒரே லட்சியத்தில் என் வாழ்நாள் முழுவதையும் கழிக்கின்றேனே, பகுத்தறிவு பெற்ற நீ ஏங்கித் தவிக்கிறாயே! என்று ஏளனம் செய்வது போல மணிமொழிக்குத் தோன்றியது. அதே சமயம் தொடர்ந்தாற் போல வெறொரு காட்சி!

கதிரவன் பிரிவினால் மலருக்கு ஏற்பட்ட ஏக்கத்தை மாற்றி, இன்பம் உண்டாக்க ஓடி வந்தது ஓர் பூச்சி. அந்த அழகிய மலரின் இனிய மதுவினை இன்பமுடன் பருகி, அந்த மலரின்மேல் ஆனந்தக் கூத்து ஆடுகின்றது தேன் பூச்சி. அந்த மலரும், மகரந்த சேர்க்கையின் மகிழ்ச்சியினால் மனங்களித்து, தனது இதழ்களை இன்பமுடன் ஆட்டி, அது அடையும் ஆனந்தத்தை அறிவிக்கிறது. இந்த ஆனந்தக் காட்சி ஐந்து நிமிடங்கள் நடந்தது. அந்த மலரை விட்டுப்பறந்துசென்றது தேன் பூச்சி. அதே சற்று நேரத்திலே 'ரிங்ங்' எனும் ரீங்காரத்துடன் வேறொரு தேன் பூச்சி அதே மலரில் வந்து உட்கார்ந்தது. ஆனால் முன்போன்ற ஆனந்த நிலையை இரண்டும் அடையவில்லை. உட்கார்ந்த உடனேயே வெறுப்புடன் பறந்தது தேன் பூச்சி. அந்த மலரும் அதை விரும்பாதது போல பலமாக அடித்தக் காற்றின் உதவியால் பக்கத்தில் திரும்பிக் கொண்டது. இரண்டினிடம் காணப்பட்டது வெறுப்பு. ஜெயக்குமாரை மணந்தால் இந்த நிலையே ஏற்படுமென்று அறிந்தாள் மணிமொழி. அதே சமயம் கோவிலுக்குச் செல்லும் சில பெண்

கள்பேசிக் கொள்வது மணிமொழியின் காதில்விழுந்தது.

"வள்ளி! இன்று வந்தவர்கள் எல்லாம் ஜெயக்குமாரை எவ்வளவு புகழ்ந்தார்கள் தெரியுமா?"

"அவன் தலையில் இடி விழ! அவன் வஞ்சகச் சூழ்ச்சிக்கு ஆளாக இன்னும் எத்தனை அப்பாவிப் பெண்கள் இருக்கிறார்களோ?"

"போடி, ஜானகி! அவரை எப்பொழுதும் வைவது தான் உன் வேலை" "நீ வேண்டுமானால் நாளை மாலையில் குளத்திற்கு தனிமையில் போய்வா. அப்புறம் அவனைப்பற்றி தெரிந்துக் கொள்வாய். நேற்று தூக்கு மாட்டிக் கொண்டு இறந்தாளே வனிதா! அதன் காரணம் உனக்குப் புரியுமா? அந்தப் படுபாவி அவனைத் திருமணம் செய்வதாகச் சொல்லி தனது வஞ்சக வலையிலே சிக்க வைத்தான். வனிதா மூன்று மாதக் கற்பவதியானாள். அவன் அவளைக் கை விட்டான். அவளுக்கு அபயம் கொடுத்து ஆதரித்தது காவிரியாற்றின் கரையில் இருக்கும் ஆலமரம். ஜெயக்குமார், காமக் கலையிலே கை தேர்ந்த பிராணி" அதற்கு மேல் மணிமொழியின் காதில் ஒன்றும் விழவில்லை. அவளது உடல் நடுங்கிற்று. "அவன் வேண்டுமானால் தேன் பூச்சியாக அலையட்டும்! நான் மலர் இல்லை; பகுத்தறிவு வாய்ந்த மங்கை! என்று விரைந் தோடினாள் அவ்விடத்தை விட்டு.

வீட்டில் நுழைந்தவுடன் ஓர் கடிதம் அவள் கண்ணில் பட்டது.

அன்புள்ள மணிமொழி!

நீ ஜெயக்குமாரை மணப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! உங்கள் திருமணத்திற்கு இடையூறாக இருக்க நான் விரும்பவில்லை. ஆனால் உனக்குப் பழந்தோழன் என்ற முறையில் ஒன்றுகூறுகிறேன். கலைக் கூடத்தைக் கண் போன்று காத்து வருவாயாக. எனக்குக் கலைக் கூடத்தின் கடைசி நாள் இதுவே.

உனது தோழன்,

மணிவண்ணன்.

இக்கடிதத்தைக்கண்ட மணிமொழி என்ன செய்வதென்று திகைத்தாள். பக்கத்திலுள்ள பாதையின் முன்பு ஓர் உருவம் வேகமுடன் நடந்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். விரைந்தோடினாள் அதைப் பிடிக்க. அது மணிவண்ணன் உருவந்தான். "குரங்கேறாத கொம்பு இல்லை" கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு. இவர்கள் எங்கு சென்ற போதிலும் ஓர் கலைக்கூடம் அமைத்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

எச். ஜி. வெல்ஸ்

சில விபத்துக்களினாலும் நன்மை ஏற்படுகிறது என்பதை பிரபல ஆசிரியரான எச். ஜீ. வெல்ஸ் என்பவரின் வாழ்க்கையிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அவருக்கு விபத்து ஏற்பட்டு, அவருடைய ஒரு கால் எலும்பு முறிந்து போகாதிருந்தால் அவர் துணிக்கடைக் குமாஸ்தாவாகவே தான் இருந்திருக்க வேண்டும். மற்றபடி ஆசிரியராகி இவ்வளவு பிரபலமாயிருக்கவே முடியாது எனலாம்.

வெல்ஸின் பாலிய நாட்களின் பெயர் பர்டி வெல்ஸ். பிறகு ஹெர்பர்ட் ஜார்ஜ் வெல்ஸாக அது மாறிற்று. அதற்கு பிறகு வெறும் எச் ஜீ. வெல்ஸ்ஸாயிற்று. அநேகமாக எச். ஜீ, வெல்ஸ் என்றால் தான் அவரை இப்பொழுது தெரியும்.

வெல்ஸின் தகப்பனார் கிரிக்கெட் ஆட்டத்தைத் தொழிலாகவே கொண்டவர். மிகவும் ஏழை. அத்துடன் அவர் ஒரு மட்பாண்டக் கடையையும் நடத்தி வந்தார். வெல்ஸ் பிறக்கும் காலத்தில் அவருடைய குடும்பம் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தது. அவர் பிறந்ததே ஒரு இருட்டறையில் தான். அந்த இருட்டறையில் தான் வெஸ்லின் சிறு பிராயம் கழிந்தது எனலாம்.

வெல்ஸ் சிறுவராக இருக்கும் சமயம் லண்டன் நகரின் சுற்றுவட்டாரப்பகுதியில் தெருவிலேயே சிலநண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். விளையாட்டு வாக்கில் ஒரு பெரிய பையன் அவரைத் தூக்கிக் கீழே போட்டு விட்டான். அதன் காரணமாக அவருடைய ஒரு கால் எலும்பு உடைந்து விட்டது. முறிந்த எலும்பைச் சேர்க்க டாக்டர்கள் பல விதத்தில் முயற்சித்தனர். அவர்கள் முயற்சி ஒருவாறாக பலித்தாலும் பிற்காலத்தில்ஏதாவது முரட்டுத்தனமாக நடந்து கொண்டால் திரும்பவும் எலும்பு முறிந்து விடும் என்று கூறினர்.

வெல்ஸ் கால் ஒரு விதமாகக் குணமாகும் சமயம் அவருடைய குடும்பம் மேலும் கஷ்டதிசையை அடைந்தது. தகப்பனார் நடத்திவந்த மட்பாண்ட சாமான் கடை நஷ்டத்தில் முடிந்தது. குடும்பத்தை நடத்த வேண்டி அவருடைய தாயார் ஏதாவது வேலைசெய்ய வேண்டியதாயிற்று அதற்காக வெல்ஸின் தாயார் கிழக்கு

எஸக்ஸில் ஒரு வீட்டில் வேலைக்கு அமர்ந்தார். வெல்ஸ் குடும்பம் அப்பொழுது இருந்த இடத்திற்கும் அவருடைய தாயார் வேலை செய்து வந்த இடத்திற்கும் 16 மைல்களாம்.

வெல்ஸும் ஏதாவது வேலை செய்ய வேண்டும் என்று நினைத்தார். அதன் காரணமாக முதலில் துணிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார். அவர் சிறு பிராயத்தில் எதையும் மெல்லத்தான் செய்வாராம். இதனால் அவர் வேலைக்குச் சேர்ந்த ஒரு மாதம் ஆகியிருக்கும் சமயம், கடை முதலாளி அவரை வேலைக்கு லாயக்கற்றவன் என்று கூறிவிலக்கி விட்டார். பிறகு ஒரு மருந்துக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கும் அதே நிலைதான். திரும்பவும் ஒரு துணிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார். ஓய்வு நேரங்களில் அவர் கிடைத்த புத்தகங்களைப் படித்துக் கொண்டே யிருந்தார். இப்படியே சுமார் இரண்டு வருடங்கள் கழிந்தன. அவருக்கு அந்த வேலை பிடிக்கவே இல்லை. அதனால் ஒரு ஞாயிற்றுக் கிழமை அன்று காலை எழுந்து தாயார் இருக்குமிடத்தை நோக்கி நடக்கலானார். அங்கு சென்று தாயாரைக் கண்டு தன் குறைகளைச் சொன்னார். தனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விட்டதாகவும் கூறினார். அதையே அவருடைய பள்ளி வாத்தியாருக்கும் எழுதினார். பள்ளி வாத்தியார் அவர் மீது இரக்கங் கொண்டு, அவர் வந்தால் வாத்தியார் உத்தியோகம் தருவதாக சொன்னார். வாத்தியார் அழைப்பைக் கண்டதும் உலகத்தை வெறுத்த வெல்ஸ், அவர் அழைப்பை ஏற்றுக் கொண்டார். வாத்தியார் உத்தியோகம் பார்க்கச் சென்றார்.

வெல்ஸ் சுமார் ஒரு வருஷ காலம் வாத்தியார் உத்தியோகம் பார்த்திருப்பார். அப்பொழுது தான் அந்த எதிர் பாராத விபத்து ஏற்பட்டது. ஒரு நாள் அவர் பையன்களுடன் கால் பந்து ஆடிக்கொண்டிருந்தார். பந்தை வேகமாக உதைத்துக்கொண்டு சென்ற வெல்ஸைத் தடுத்து நிறுத்த ஒருவன் முன்னால் ஓடி வந்தான். அவன் மீது மோதி வெல்ஸ் கீழே விழுந்தார். வந்தவனும் கால் தடுக்கி அவர் மீது விழுந்தான். வேறு இருவர் கூட எதிர் பாராத வகையில் அவர்கள் மீது விழுந்து விட்டனர். இக்காரணத்தால் வெல்ஸின் பாலியத்தில் முறிந்தகால்எலும்புமீண்டும் முறிந்தது. அவருடைய விலா எலும்பு முறிந்து விட்டது. உடனே வெல்ஸ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். டாக்டர்கள் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தனர். ஆனால் அவர்பிழைப்பார் என்ற நம்பிக்கைக்

டாக்டர்களிடையே இல்லை. ஆனால் சில மாதங்கள் பிரக்ஞையற்றிருந்த வெல்ஸுக்கு அது தெரிந்தது, இருந்தாலும் அவரால் ஏதும் செய்ய முடியாத நிலையிலிருந்தார். வெல்ஸ் அதே வியாதியால் பன்னிரண்டு வருடங்கள் ஆஸ்பத்திரியிலேயே படுத்திருந்தார். ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் சமயம் அவர் நர்ஸுகள் மூலமாகப் பல புத்தகங்களை வரவழைத்துப் படிக்கலானார். நாளடைவில் அவருக்குப் புத்தகப் படிப்பில் அதிக ஆவல் ஏற்படலாயிற்று. சுமார் ஏழு வருஷங்கள் வரை புத்தகங்களைப் படித்ததன் பயனாக அவருக்கு, கதை கட்டுரைகள் எழுத வேண்டும் எனத் தோன்றிற்று. கதை, கட்டுரை எழுதலானார். சுமார் ஐந்து வருஷங்கள் வரை அவர் எழுதிக் குவித்தார். பிறகு ஆஸ்பத்திரியிலிருந்து வெளி வந்ததும் தாம் எழுதியதைப் படித்துப் பார்த்தார். அவை வெகு சாதாரணமாகவும், மட்ட ரகமாகவும் இருந்தனவாம். அதனால் அவ்வளவையும் நெருப்பில் போட்டுப் பொசுக்கி விட்டார்.

ஆஸ்பத்திரியிலிருந்து வெளி வந்ததும் அவர் திரும்பவும் வாத்தியார் உத்தியோகத்தை மேற் கொண்டார். அவர் காதரின் ராபின்ஸ் என்ற யுவதிக்குப் பிரத்தியேகமாகப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவளும் அவரைப் போலவே வியாதி பிடித்தவள், பலவீனக்காரி. இருந்தாலும் வெல்ஸுக்கு அவளைப் பிடித்திருந்தது. அவளுக்கும் அவரைப் பிடித்திருந்தது. இருவரும் கலியாணம் செய்து கொண்டனர்.

வெல்ஸின் இல்லற வாழ்க்கையுடன் கதை கட்டுரை எழுதும் தொழிலும் ஆரம்பமாயிற்று. அவர் எழுதிய ஒவ்வொரு கட்டுரையும் பத்திரிகையில் இடம் பெற்றது. பல புத்தகங்களை எழுதினார். பணமும் புகழும் அவரைத் தேடி வரலாயின.

வெல்ஸ் புகழ்பெற்றதற்குக் காரணம் அந்த விபத்துக்கள் தான் என்று அவரே தனது சுய சரிதத்தில் கூறியிருக்கிறார். அப்படியிருக்க நாம் அதை மறுத்தா சொல்லப் போகிறோம்? ஒப்புக் கொள்ள வேண்டியது தான்.

(காண்டீபம்)

படக்காட்சி மூலம் கற்றல்

(கோ. சந்திரமவுலீஸ்வரன் பி.ஓ, எல்; பி.டி.)

இறைவன் படைத்த உயிர்களுள் மனிதனே சிறந்தவன். அவன் ஐம்பொறிகளின் வாயிலாகவே அறிவைப் பெறுகிறான். நன்மையையும் தீமையையும் உணரச் செய்யும் பகுத்தறிவே அவனைப் பிற உயிர்களினின்றும் பிரித்தது. "மக்கடாமே யாறறி வுயிரே', என்பார் தொல்காப்பியர். அவ்வாசிரியரே பின்னர் "ஒருசாரி விலங்கு முளவென மொழிப" என்பதால் விலங்களுள்ளும் சில ஆறறிவு பெற்றமை புலப்படும். ஐம் பொறிகளுக்குச் செவ்விய முறையில் பயிற்சியளித்தாலன்றி நல்லறிவு பெறுதலென்பது இயலாது.

ஐம் பொறிகளைக் கொண்டு அறியும் அறிவே சிறந்தது. ஒரு பொருளைத் தொட்டும், சுவைத்தும், பார்த்தும், முகர்ந்தும், அதன் ஒலியைக் கேட்டும் அதன் இயல்பை அறியலாம். உடம்பினால் வெப்பம், தட்பம், வன்மை, மென்மை முதலியவற்றை அறியலாம். நா அறுசுவையினையும் அறியும், மூக்கு நன்னாற்றத்தையும், தீய நாற்றத்தையும் அறியச் செய்கிறது. கண்ணினால் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம் என்பனவற்றை உணருகிறோம். மனம் 'இது செய்தல் வேண்டும்; இது தவிர்தல் வேண்டும்' என்றறியும் இயல்பனது. ஒன்றன் செய்கையை உணர்ந்து அஃது இத்தன்மையது என்று அனுமானிக்கும் ஆற்றலும் அதன் கண் உண்டு.

வாழ்க்கையில் ஐம்புலப் பயிற்சி சிறந்த பயனளித்தலைக் காண்கிறோம். ரத்தின வியாபாரியும், நூல் வியாபாரியும், மருத்தவனும் சிறந்து விளங்குதற்குக் காரணம் அன்னார் பெற்ற பயிற்சியன்றோ! நெல் மரத்தில் காய்க்கும் மென்றும், பருத்தி ஆட்டின் முதுகில் தோன்றும் மென்றும் சிறுவர் கருதக் காரணம் என்னை? அவர்கள் தங்கள் பொறிகளைச் செவ்விய முறையில் பயன்படுத்தாமையேயாம். பள்ளிச் சிறுவர்களை மருத்துவர்கள் ஆண்டு தோறும் சோதித்து அன்னாரிடம் தோன்றும் குறைகளைப் போக்க, பெற்றோர்கள் துணை செய்தல் வேண்டும். பிறவிக் குருடர்களுக்கும், செவிடர்களுக்கும், ஊமைகளுக்கும் தனிப் பள்ளிகளை நிறுவி, அவர்களும் வாழ்க்கையை இனிது கழிக்க தம் வாணாளை வீணாள் ஆக்காது உழைக்கும் மேனாட்டி

னர் செயல் பெரிதும் பாராட்டு தற்குரியதாகும்.

ஐம் பொறிகளுக்கு எங்ஙனம் பயிற்சியளிக்கலாம்? சிறுவர்கள் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதாலும், காட்சிச் சாலைகளையும், மலையாறு, நீர்வீழ்ச்சிகள் முதலிய இயற்கைக் காட்சிகளைக் கண்ணுறுதலாலும்படம் வரைவதாலும், சோதனைகள் செய்வதாலும் ஐம்புலப் பயிற்சி பெறுவர். மாண்டிசோரி அம்மையார் இதற்கென சில கருவிகளைப் பயன்படுத்துவதை நாம் பார்க்கிறோம். படக்காட்சி மூலம் கல்வி கற்பதால் கட்புலனும், செவிப்புலனும் நல்ல பயிற்சி பெறுகின்றன.

இக்காலத்தில் படக்காட்சி உலகமெங்கும் உலவி வருகின்றது. சிறுவர் முதல் முதியோர் வரை எல்லோரும் படம் பார்ப்பதில் பெருவிருப்புடையோராயுள்ளனர். எனவே, கல்வி கற்பிக்கவும் படக்காட்சி பெரிதும் பயன் படுகிறது. 'பருப்பொருளைக் கண்டு நுண்பொருளை உணர்தல்' என்பது ஓர் உண்மை. கையில் நூலெடுத்துப் படிப்பதற்கு அவகாசமில்லாத வேலைக்காரர்களும் படிக்கத் தெரியாதவர்களும் இதனால் அறிவு பெறுவர். படக்காட்சி காண்போருக்கு உற்சாகத்தை அளிக்கின்றது. மக்கள் படத்தில் கண்டவற்றை மறப்பதில்லை. சிறுவர்கள் கவனத்தைச் சிதற விடாமல், நிலைநிறுத்தச்செய்வது படக்காட்சி என்னலாம். சிறுவருக்கு உணர்ச்சி ஊட்டுவதும் அதுவேயாகும். சில ஆண்டுகளுக்கு முன் நடந்தவற்றையும், வேறு நாட்டில் நடந்தவற்றையும், நாம் காணச் செய்வதால்படக்காட்சிகாலத்தையும் இடத்தையும் வென்று விட்டதெனத் திட்டமாகக் கூறலாம். பூகோளம் விஞ்ஞானம், கைத்தொழில் முதலியவற்றைப் பற்றிய கருத்துக்களைப் படம்மூலமாக நாம் அறியலாம். தூரதிருட்டிக் கண்ணாடியால் காணும் நுண்ணுயிர்களையும் படத்தில் பெரிதாகக் காட்டலாம். பயில்வான்களின் உடற்பயிற்சியைக் காணப் படம் பெரிதும் துணை செய்யும். எனவே, படக்காட்சியால் உண்டாகும் நன்மைகளை மாணவர் பெரிதும் அடையுமாறு செய்தல் நம்மனோர் கடமையாகும்.

இக்காலத்தில்உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி சம்பந்தமான படங்கள் காண்பிக்கப் படுகின்றன. முறைப்படி அப்படங்களைக் காணச்செய்தால், மாணவர் அறிவு பெருகும். முதன் முதலில் நாம் காட்டும் படத்தை அறிதற்கு மாணவர்களைத் தயார் செய்ய வேண்டும். அடுத்தபடியாகப் படத்தைக் காட்ட வேண்டும். படத்தைப் பார்த்த பின் வகுப்பில் அதைப் பற்றிப் பேச வேண்

டும். மறு முறை படத்தைக் காண்பித்து, முன் காணாதவற்றை நன்கு காணச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யின் மாணவர் தம் ஐயங்கள் யாவும் நீங்கும்.

படக்காட்சி எத்துணைச் சிறந்ததாயினும் அது ஆசிரியரினும் சிறந்ததன்று. கற்பதில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேலை உண்டு. ஆசிரியர் சொற்பொழிவாற்றவும் மாணவர் கேட்கவும், அவரவர்கள் வேலைகள் முடிந்ததெனக் கருதுதல் கூடாது. ஆசிரியர் இடையிடையே கேட்டலும், மாணவர் விடையிறுத்தலும், வகுப்பில் நடைபெற வேண்டிய செயலாகும்.

பள்ளிக்கூடங்கள் காட்சிச் சாலைக்குக் குரிய வசதிகளைப் பெறுதலென்பது எளிதன்று. பொருட்செலவு அதிக மேற்படும்.

மாணவர்கள் நினைப்பதற்கு இடமேயில்லை. எப்பொழுதும் கண்டு கொண்டே இருக்கின்றனர் என்பர் சிலர். படம்காட்டும் பொழுது, படத்தைப் பற்றி ஒருவர் கூறுவதால், மாணவர்கள் அவற்றைக் கேட்டுக் நினைக்கட்டும். காலத்திட்டத்திற் கேற்றவாறு படக்காட்சி அமைத்தல் வேண்டும். மாணவர்களுக்கு ஏற்ற பொருள்களைப் படக்காட்சி மூலம் காண்பித்தல் நல்லது. சிறுவர் முதல் முதியோர் வரை ஒரே படக்காட்சியைப் பார்ப்பதால் சிறுவர் ஒழுக்கம் கெட ஏதுவாகின்றது. சிறுவர்களுக்கெனவும் முதியோருக்கெனவும் காட்சிச் சாலைகள் அமைய அரசியலார் திட்டம் வகுக்கவேண்டும். முதியோர் கல்வித் திட்டம், நம் நாட்டில் காட்டுத் தீபோல் பரவிவருகின்றது. அது கருதிய பயனை அளிக்கவேண்டுமாயின் படக்காட்சியை ஓர் துணைக் கருவியாகக் கருத வேண்டும். படக்காட்சிகள் காதல் படங்களைக் காட்டுவதை நிறுத்தி, பொது அறிவு வளர்ச்சிக் கேற்ற துறையில் உழைக்க நாம் ஆவன செய்வோமாக.

தன்னை வியந்தான் (கற்பனை)

டாக்டர். மு. வரதராசனார், எம். ஓ. எல்; பி. எச். டி.

திருவள்ளுவர் ஒரு நாள் பொழுது சாய்வதற்கு முன் ஒரு தோப்பின் பக்கமாக உலவிக் கொண்டிருந்தார். திருக்குறளில் பொருட்பால் தொடங்கி அரசியலில் ஆராய்ந்து எழுதி வரும் காலம் அது. ஆகவே அதைப்பற்றி ஓயாமல் எண்ணிக் கொண்டே மெல்ல உலவிக் கொண்டிருந்தார். இளவேனில் காலம் ஆகையால் குயில்கள் பாடும் பாட்டு இடையிடையே அவருடைய செவியில் விழுந்தது. ஆயினும் அந்தக் குயில் இருந்த மாமரமோ அல்லது அதன் இனிய குரலோ அவருடைய கண்ணையோ செவியையோ கவரவில்லை. அவருடைய மனம் முழுதும் அரசியல் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தது.

மேற்கு வானம் இயற்கையின் ஓவியத்தினைப் புலப்படுத்துவது போல் பலவகை நிறங்களாக மாறிவரத் தொடங்கியது. யானைப்படை போலவும் ஆட்டுமந்தை போலவும் அடர்ந்த தோப்பைப் போலவும் அந்த மேற்கு வானத்தில் கருமேகங்கள் மாறி மாறிப் பல உருவங்களாக அமைந்து வந்தன. எதிர்பாராத வகையில் அவை கரைந்து அடுக்கான மலைகளைப் போலவும் மலைகளின் குவடுகளைப் போலவும் காட்சி அளித்தன. இதுவரையில் கருமையும் வெண்மையுமே தன் வண்ணங்களாகக் கொண்டு ஓவியம் தீட்டிவந்த இயற்கை, திடீரென்று பொன்னிறம், செந்நிறம், சாம்பல் முதலிய பலவகை வண்ணங்களில் தன் திறனைக் காட்டத் தொடங்கியது. கருநிற மலைக்குவடுகள் எல்லாம் பொன்குவடுகளாகப் படிப்படியாக மாறின. அடிப்பகுதிகள் செம்மண் மலைபோல் செந்நிறம் பெற்றன. சாம்பல் நிறமும் கலந்து கலப்பு நிறம் ஆக்கியது. மலைகளும் மறைந்து செந்நிறக் குழம்பாய்க் கரையும் காட்சி வந்தது. கொல்லன் உலையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பு போல் அந்திவானம் முழுதுமே காணப்பட்டது, செங்கதிர் என்று பெயர் பெற்ற கதிரவன் தன் ஒளி பட்ட அளவில் கருமுகில்களையும் செந்நிறப் பிழம்புக்களாய் மாற்றும் ஆற்றலைக் காட்டித் தான் மட்டும் இருக்

கும் இடம் தெரியாமல் மறைந்து விட்டான். அவனைத் தொடர்ந்து வந்த இரவு என்னும் மன்னவன் எல்லோரையும் வயப்படுத்தும் ஆற்றல் தனக்கும் உண்டு என்றும் விளக்குபவன் போல், திசைகளை எல்லாம் இருள் நிறமாக்கும் பணியில் ஈடுபட்டான். அந்தி வானமும் அந்த நிறம் பெறத் தொடங்கியது. பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஆறத் தொடங்கிப் படிப்படியாகக் கருநிறம் பெறுவது போல், செந்நிறக் குழம்பாகத் தோன்றிய மேகங்களும் இருள் நிறம் பெறலாயின.

அந்திவானின் வண்ணம் ஓவிய அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்து மேற்குத் திக்கை நோக்கி நெடு நேரம் இமையாமல் பார்த்து வருவது திருவள்ளுவரின் வழக்கம். ஆயினும் அன்று அவருடைய கண்ணையும் கருத்தையும் அறிந்த வானமும் கவரவில்லை. அரசியலில் அவர் உள்ளம் ஈடுபட்டிருந்த நிலைமை அவ்வாறு இருந்தது.

ஆயினும் அவருடைய உள்ளத்தைக் கலைத்திடும் ஆற்றல் சில அணில்களுக்கு இருந்தது. அவர் உலவிய வழியின் குறுக்கே தொடர்ந்து சில அணில்கள் ஓடத்தொடங்கின; "இந்த அணில்கள் இந்த மாலை நேரத்தில் மரத்தை விட்டு மரத்திற்கு ஓடக்காரணம் என்ன என்று நின்று நோக்கினார். அப்போது தான் அவருடைய செவியில் யாரோ மரம் வெட்டும் ஒலி கேட்டது. ஒலி வந்த திசையை நோக்கினார். அணில்கள் அங்கிருந்து தான் வந்தன என்றும் அறிந்தார். நெருங்கிச் சென்றார். ஒரு காட்டுவாகைமரத்தின் உச்சியிலிருந்து ஒலி வருவதைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். கோடாரியும் கையுமாக காட்டுவாகை மரத்தின் மேல் ஒருவன் அந்த கிளையில் உயர ஏறி நிற்பதைக் கண்டார்.

மரத்தின் மேல் இருந்தவன் அவரைப் பார்த்தான். "யார் அய்யா, கீழே? ஏதாவது கிளை விழுந்தாலும் விழும், கொஞ்சம் தொலைவாகப் போய் நில் அய்யா!" என்றான்.

"அப்படியே போகிறேன்பா. ஆனால் ஒன்று, "நீ ஏன் அவ்வளவு உயரத்தில் ஏறி வெட்டுகிறாய்? கீழ்க்கிளைகள் போதுமே அப்பா" என்றார் வள்ளுவர்.

"உனக்கு என்ன அய்யா, அதைப்பற்றி? நீ வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு போ அய்யா" என்றான் மரம் வெட்டுபவன்.

"உன் நன்மைக்காகத் தான் சொன்னேன் அப்பா. நீ அவ்வளவு உயரத்தில் ஏறி வெட்டுவது நல்லது அல்ல. விழுந்தால் எவ்வளவு துன்பம்! துன்பம் வருமுன்னர் காத்துக் கொள்ள வேண்டும் அல்லவா?

நாமாகப் பார்த்து நமக்குத் துன்பம் தேடிக் கொள்ள வேண்டுமா?'' என்று அன்பு கலந்த குரலில் திருவள்ளுவர் சொல்லிப் பார்த்தார்.

''நீ எனக்கு புத்தி சொல்ல வந்துவிட்டாயோ? எனக்குத் தெரியும் எல்லாம். இன்றைக்குத்தான் நான் புதிதாக மரம் ஏறவில்லை, தலைமுறை தலைமுறையாகக் கற்ற வித்தை இது. இங்கேயும் ஏறுவேன்: இன்னும் நுனிக்கொம்பிலும் ஏறுவேன்'' என்று தன் வலியைத் தானே புகழ்பவன் போல் கூறினான் மரம் வெட்டி.

" நான் போகிறேன். ஆனாலும் உன் நன்மைக்காகச் சொல்கிறேன். உயரத்தில் உள்ள நுனிக்கொம்புகள் அசையும், ஆடும், ஆகையால் நல்ல இடமாகப் பார்த்து உறுதியாக நின்றுகொண்டு வெட்டு " என்று சொல்லித் திருவள்ளுவர் நகர்ந்தார்.

அவருடைய அறிவையும் அன்பையும் அளந்தறிய முடியாத அந்தப் பேதை; " நான் எப்படியாவது போகிறேன். நீ போ அய்யா; இருட்டிப் போகுது. உன்னாலே வேறே நேரம் ஆகிறது. போ அய்யா போ " என்று கோடரிக் கொண்டு வெட்டத் தொடங்கினான்.

அவன் மரம் வெட்டும் ஒலியைக் கேட்டுக்கொண்டே திருவள்ளுவர் வீடு நோக்கித் திரும்பினார். " தன்னை வியந்தான் விரைந்து கெடும்" என்று அவருடைய வாய் சொல்லிக்கொண்டிருந்தது.

வீட்டிற்குள் நுழைந்த போது, அவருடைய முகத்தில் புன்முறுவல் இருந்தது. கூடத்தில் இருந்த வாசுகி அம்மையார் அந்தப் புன்முறுவலைக் கண்டார். வீட்டை விட்டுப் புறப்படும்போது அவருடைய முகத்தில் ஆழ்ந்த சிந்தனையைக் கண்ட அந்த அம்மையார், அவர் திரும்பியபோது அந்தச் சிந்தனையின் தேக்கம் இல்லாமல் ஏதோ விடுதலை பெற்று மகிழ்வது போன்ற புன்சிரிப்பு விளங்குவதைக் கண்டபடியால், அதன் காரணத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினார். தம் கணவர் எழுதுமிடத்தை நோக்கிச் செல்வதைக் கண்டார். எழுதி முடிக்கட்டும், பிறகு கேட்கலாம் என்று எட்டிப்பார்த்து நின்றார்.

திருவள்ளுவர் ஏடும் எழுத்தாணியும் எடுத்து நான்கு வரிகள் எழுதி முடித்து, எழுத்தாணியைக் கீழே வைத்து விட்டு, மலர்ந்த முகத்தோடு ''வாசுகி'' என்றார்!

"என்னங்க!" என்றார் பின்புறத்தில் நின்றிருந்த அந்த அம்மையார்.

" என்ன! நீ இந்நேரம் இங்கே நின்று கொண்டிருந்

தாயா? நான் பார்க்கவில்லையே" என்றார் திருவள்ளுவர்.

"நீங்கள் வந்தபோதே நானும் வந்தேன். ஏதோ எழுதப் போகிறீர்கள் என்று உங்கள் முகத்தின் கிளர்ச்சியாலேயே தெரிந்து கொண்டேன். உள்ளத்தில் உள்ளதை எழுதி முடித்த பிறகு கேட்கலாம் என்றுதான் காத்துக் கொண்டிருந்தேன்."

"அப்படியா? என்ன கேட்கப் போகிறாய்?"

"இன்றைக்கு உலாவப் புறப்படும்போது உங்கள் முகத்தில் கவலை மிகுதியாக இருந்தது."

"கவலையா? எனக்கா?"

"கவலை என்றால் நம் வாழ்க்கையைப் பற்றிய கவலை இல்லை. ஏதோ சிந்தனைக் கவலை, திருக்குறளைப் பற்றிய சிந்தனைக் கவலை."

"அப்படிச் சொல், உண்மைதான். அரசியலைப்பற்றி ஓயாமல் எண்ணி வருகிறேன். வலியறிதல் என்ற அதிகாரத்தைப் பற்றி விடாமல் எண்ணி வருகிறேன். அரசியலில் அனுபவம் உடைய எனக்கு அந்தச் சிக்கல் பெரிதாக இருக்கிறது. நான் எழுதுவது அரசனுக்கு உரிய சிறந்த அறிவுரையாகவும் இருக்க வேண்டும். அதே நிலையில் கடமைப் பொறுப்பு ஏற்றுள்ள எவர்க்கும் பொதுவான அறிவுரையாகவும் இருக்கவேண்டும். எல்லோர்க்கும் எளிதில் விளங்கக் கூடிய உண்மையாகவும் இருக்கவேண்டும் என்று திரும்பத் திரும்ப எண்ணி வந்தேன்."

"அதை உணர்ந்துகொண்டேன். நீங்கள் திரும்பிவந்தபோது அந்தக் கவலை இல்லை. புன் சிரிப்பே இருந்தது. நான் எதிரே இருப்பதையும் கவனிக்காமல் ஏடும் எழுத்தாணியும் தேடிக்கொண்டு இங்கே வந்தீர்கள். அதனால் பிறகு கேட்கலாம் என்று இருந்தேன்."

"நல்லதுதான். என் எண்ணத்தைக் கலைக்காமல் விட்டது, சிறந்த உதவிதான்."

"ஆ முடித்துவிட்டேன். நீயே வந்து படி. நான் காதால் கேட்டுப் பார்க்கிறேன். குறள் ஓசை இனிமையாக இருக்கிறதா என்று உன் வாயால் படிக்கக் கேட்கவேண்டும்."

வாசுகி அம்மையார் உடனே அந்த ஏட்டைப் படித்தார்.

'வினைவலியும் தன்வலியும்...'' என்று அந்த அம்மையார் படிக்கத் தொடங்கினார்.

"அது அல்ல; அது காலையில் எழுதிவைத்த குறள். 'உடைத்தம் வலி அறியார். என்பதைப் படி" என்றார்கள்'

"உடைத்தம் வலி அறியார்
ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.
(34-ம் பக்கம் பார்க்க)

பூகம்பம்

சில தினங்களுக்கு முன் அஸ்ஸாம்மாகாணத்தில் திடுக்கிடும்படியான ஒரு பூகம்பம் தோன்றியது. இது மிகவும் பெரிய பெரிய பூகம்பம் என்றும் உலகத்திலேயே மகத்தானதென்றும் நமக்கு தெரியவருகிறது. ஐம்பத்து மூன்று வருஷங்களுக்கு முன் அதிர்ச்சி ஏற்பட்டு அதனால் பல மக்கள் மாண்டனர்; பொருள் சேதமும் ஏராளம் ஏற்பட்டது. இப்பொழுது தோன்றிய பூமியின் ஆட்டம் பலமானது; பூகம்பம் அளக்கும் கருவிகளை தகர்த்தெறிந்து விட்டது. எனினும் தெய்வாதீனமாக அதிக உயிர்ச் சேதம் இல்லை. இறந்தவர் பதினொருவர் மட்டுமே. பொருட்சேதம் எவ்வளவு என்று இன்னும் திட்டமாக நிர்ணயிக்கப்பட வில்லை எனினும் அதிகம் இல்லை என்றும் நம்ப இடமிருக்கிறது. பூகம்பமானது ஆதிகாலம் தொட்டு அவ்வப் பொழுது பல நாடுகளிலும் தோன்றி வரும் ஒரு இயற்கைச் சம்பவம். இதையொட்டித்தானெத்தனை நம்பிக்கைகள்!

பூமி அதிர்ந்து ஆடுவதால் உயிரும் பொருளும் அழிவதால், இது மக்களின் மனதில் என்றும் அழியாத ஒரு குலை நடுக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. நம் நாட்டிலும், பிற நாடுகளிலும் வசித்த முன்னோர்கள் பூகம்பமானது கடவுள் மனிதனைத்தண்டிக்கும் வழி என்றனர். அது எப்படி உண்டாகிறது என்பதற்காக பல கதைகளைச் சிருஷ்டித்திருக்கின்றனர். இவைகளை நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவைமிகவும் விசித்திரமானவை என்பதை மட்டும் மறுக்க முடியாது. பூமிக்கு அடியில் ஒரு பெரிய எட்டுக்

(33-ம் பக்கத்தொடர்ச்சி)

அமைந்தாங்கு ஒழுகான்
அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

என்று அம்மையார் படித்தார். மற்றொரு முறையும் படிக்கச் சொன்னார். இரண்டாம் முறையும் அம்மையார் படித்தார்.

கேட்ட திருவள்ளுவர் புன்முறுவலோடு, "குறள் ஓசை நன்றாகத்தான் இருக்கிறது என்பதை நீதான் சொல்ல வேண்டும்."

(குருகுலம்)

கால் பூச்சி இருக்கிறது என்று ஜப்பானியர் நினைத்தனர். அதற்கு 'ஜிஷின் மூஷி'' என்று பெயரிட்டனர். அது அசையும்பொழுது தன் மேலிருக்கும் பூமியையும் ஆட்டுகிறது என்றனர். மங்கோலியர், பூகம்பம் ஒரு வாத்தால் உண்டாகிறது என்று சொன்னார்கள். இந்தியாவில் இன்னும் மலைக்கு அடியில் ஒரு எலி இருப்பதாகவும் அது குழி தோண்டும் போது அதிர்ச்சி ஏற்படுகிறதாகவும் சிலர் கருதுகின்றனர். மகம்மதியர்களோ எனில் ''இல்லை எலியால் மலையைத் தாங்க முடியாது, அது கட்டாயம் ஒரு மத யானையாகத் தான் இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். நாகரீகம் தலைவிரித்தாடும் அமெரிக்காவிலும் பூமியின் அடியில் ஒரு ஆமை இருப்பதாகவும் அதன் அசைவினால்தான் பூகம்பம் ஏற்படுகிறது என்றும் நம்புகின்றனர். மேலும் பூமியின் அதிர்ச்சி உண்டாவதாக சில நாடுகளில் தனித்தனி தேவதைகளும் உண்டு. இன்னும் ஒன்று கேளுங்கள்! 1930-ம் வருஷத்தில் நேபிள்ஸ் எனும் உலகின் பெயர் போன நகரத்தின் கிறிஸ்தவ மதத் தலைமை ஆசாரியார், ''பெண்களுக்கே உரித்தான முக்கிய அருங்குணங்களாகிய அச்சம் நாணம் பயிர்ப்பு முதலியவைகளை தற்காலத்துப் பெண்கள் இழந்து வருவது கடவுளுக்கே பொறுக்கவில்லை, அதனால்தான் பூகம்பம் வருகிறது'' என்று சொன்னார். இது ஒருபுறமிருக்க விஞ்ஞானிகள் பல வருஷங்களாக பூகம்பத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து அதன் உண்மைக் காரணத்தை அறிய முயன்றனர்.

நாம் காணும் பூமியின் மேற்பரப்பு, குளிர்ந்து பசுமைத் தாங்கி அழகிய காட்சியை அளிக்கிறது. ஆனால் அதன் கீழே நெருப்பு கக்கிக்கொண்டிருக்கிறது, என்றால் நீங்கள் நம்புவீர்களா? பூமியின் கீழே சுரங்கம் தோண்டினால் சூடாக இருப்பது தெரியும். அப்படிக் கொஞ்சதூரம் சுமார் 8000 அடி அல்லது கொஞ்சம் அதிகமாகவோதான் போக முடியும். அதற்குக் கீழே ஒரே நெருப்புச் சூடாக இருக்கும். போகப் போக அதிகரிக்கும் அந்தச் சூட்டை யாரும் இதுவரையில் பார்த்ததில்லை. பார்க்க முடியுமோ என்பதும் சந்தேகம். இது எவ்வளவு தூரம் தெரியுமா? சுமார் 6000 மைல் ஆழத்திற்கு இதே கதைதான். அங்கு பாறைகள் உருகி, தண்ணீர் மாதிரி ஆகி உருண்டு பிரண்டு ஒரே நெருப்புக் குழம்பாக இருக்கும். இந்த அதகதபாதாளத்தில் தான் பூகம்பம் தோன்றும். இரு முக்கிய காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவது இந்த கற்குழம்பால் அக்கப்பட்ட தண்ணீர் ஆவியாக

மாறி அதிக அமுக்கம் காரணமாக அவஸ்தைப்படும். இதை சாதாரணமாக நீங்கள் பார்க்கலாம். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து மூடி சூடு செய்தால், நீர் ஆவியானவுடன் மூடியை "டப் டப்" என்று தூக்கிப் போடும். ஒரு சிறு அளவு நீராவிக்கு இந்த சக்தி உண்டானால் அபார சூட்டிலும் அதிக அமுக்கத்திலும் அகப்பட்டுக்கொண்ட நீராவிபடும் பாட்டைப் பற்றிக் கேட்பானேன். தக்க சமயம் வந்ததும் படார் என்ற பேரிரைச்சலுடன் வெடிக்கிறது. இந்த வெடியினின்று தோன்றும் அதிர்ச்சிதான் பூமியின் மேல் மட்டம் வரை பரவி பூமியை கிடுகிடும்படி ஆடச்செய்கிறது. மற்றொரு காரணமும் உண்டு.

உலகில் ஒரு உயிர் தோன்றி வெளிவரும் பொழுது தாய்க்கு வலி உண்டாவதும் இயற்கை. இந்த வலிதான் பிரசவவேதனை. மனிதனுக்கும் மிருகங்களுக்கு மாத்திரம் தான் உண்டு என்று நினைக்காதீர்கள்! பூமாதேவி என்று வழங்கும் அன்னைக்கும் உண்டு! ஆம்! பூமிதானே மலைகளை ஈன்றெடுக்கிறது. புதிதாக ஒரு குழந்தை மலை வெளிவரும் பொழுது தாய்க்கு பிரசவ வேதனை தோன்றுகிறது. இந்த வலி இழுப்பாக மாறுகிறது. ஒரு பக்கம் மலை மேலே வரும் பொழுது இன்னொரு பக்கம் இழுபடுகிறது. இதனால் பூமியின் வயிற்றிலுள்ள கற்குழம்பு சுருங்குகிறது. சுருக்கம் அதிகமானால் பிளவுதோன்றுகிறது. பிளவு நெடுந்தூரம் பரவினால் தரை மட்டத்தில் திடீரென்று பூமி விரியும். அவ்விடத்தில் உள்ள எல்லாம் பிளவில் விழும். பிறகு விரிந்த பூமி மூடிக்கொள்ளும். சில சமயம் விரிந்த இடம் நன்றாகத் தெரியுமாம். இவ்விதமாகவும் பூமியில் அதிர்ச்சி ஏற்படுகிறது.

இதெல்லாம் நடக்க ரொம்ப காலம் ஆகுமோ என்று நினைக்க வேண்டாம். எல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்துவிடும்.

உலகத்திலேயே மிகப்பெரிய பூகம்பங்கள் சுமார் 40 வினாடிகளாம். அதற்குள்ளாகவே என்ன ஆபத்து நேருகிறது. கோவில் மணிகள் தாமாக 'டண் டண்' என்று அடிக்க ஆரம்பிக்கின்றன, வீடெல்லாம் ஆட்டம் கொடுக்கிறது. மக்கள் வீட்டை விட்டுச் சிதறி ஓடுகின்றனர். தட தடவென்று வீடுகள் இடிந்து விழுகின்றன. மிருகங்கள் அலறுகின்றன. சில விடங்களில் பூமி வெடித்து மண் வெளிப்படும். ஆறும் ஏரியும் இருந்த விடம் தெரியாமல் மறைகின்றன! வேரற்று மரங்கள் தபால் என்று சாய்கின்றன. பொதுவாகத் தரையின் மேலுள்ள எல்லாம் நாசம், நிர்மூலம்! இதுவே பூகம்பம்.

பூகம்பம் தோன்றும் இடத்துக்கு நேர்மேலே இருக்கும் பூமியில் அதிர்ச்சியும் ஆட்டமும் அதிகமாக இருக்கும். அங்கு ஜன நெருக்கமான பட்டணம் இருந்தால் உயிர்ச் சேதமும் ஏராளமாகும். நல்ல வேளையாக அஸ்ஸாமில் அப்படி யில்லை. ஹிமாலய மலைப் பிரதேசம் பூகம்ப பிராந்தியம் என்பது தக்க அறிஞரின் கருத்து. இதில் திபெத்துக்கு அருகில் பூகம்பம் தோன்றியது "தேள் கொட்டுவது ஓரிடம், நெரிக்கட்டுவது இன்னொரிடம்" என்பது போல், திபெத்தில் உண்டான விபத்துக்கு அஸ்ஸாமில் அதிர்ச்சி, ஆயிரம் மைல் நடுவே இருந்ததால் தான் சேதம் இல்லை. இதைத் தீமையிலும் நன்மையாகவே கருத வேண்டும்.

இப்பொழுது வானநிலை அறிஞர்கள் எப்பொழுது மழை காற்று முதலிய வரும் என்று முன் கூட்டியே அறிந்து அறிவிக்கின்றனர். ஓரிடத்தில் பூகம்பம் வருவதற்கு அறிகுறியாக நாய் ஊளையிடும்; குதிரைகள் லாயத்தை விட்டு ஓடும், என்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. இவையல்லாது விஞ்ஞானிகள் திண்ணமாக எப்பொழுது பூகம்பம் எங்குவரும் என்று சொல்லும் நிலையில் இன்று இல்லை. முயற்சி திருவினையாக்கும் என்பது உண்மையானால் ஒரு நாள் விஞ்ஞானிகள் பூகம்ப வருகையை அறிவிக்க முடியும்.

சுதேசமித்திரன்

அறிவுக் கதிர்

மனிதன் தன் சூழ்நிலையால் உருப் பெறுகிறான். சூழ்நிலை சரியாக இருந்தால் அவன் வளர்ச்சியடைகிறான். அனுகூலமாயில்லாதிருப்பின், அவனது வளர்ச்சி தடைப்படுகிறது. அதாவது, சமூக ஸ்தாபனங்கள் பரிபக்குவ மற்றும், திட்டமான முன் யோசனையில்லாமலும் இருந்தால் மக்கள் வளர்ச்சி குன்றி அவதிப்படுவர். ஆனால், சூழ்நிலையில் சீர்திருத் தங்கள் ஏற்படின், மக்கள் அபிவிருத்தியடைவது திண்ணம்.

பிராவிடண்ட் பண்டு பணத்திலிருந்து இன்ஷ்யூரென்ஸ் பாலிஸிகளுக்கு பணம் கட்டலாம்.

ஜீ. ஓ. நெம் 1031 (29-3-50)

பிராவிடண்ட் பண்டில் சேர்ந்துள்ள பணத்திலிருந்து இன்ஷூரன்ஸ் (சாவுப் பண்டு)க்கு, வருடாந்திர பிரீமியமாகக் கட்டலாம். அந்தப்பணம் தங்கள் சம்பளத்திலிருந்து பிடிக்கப் படும் வருடாந்திரத் தொகைக்கு மேலேடுக்கக்கூடாது. (இன்னும் விளக்கமாக பல சட்ட திட்டங்கள் கெஜட்டில் கொடுக் கப்பட்டிருக்கிறது. விளக்கம் வேண்டியவர்கள் (6-6-50) கெஜட் டைப் பார்த்துக் கொள்ளலாம்.)

லோயர் கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் பரிட்சைக்குப் போகலாம்.

லோயர் கிரேட் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேட் பரீட்சைக்கு எழுதலாமென்றும், ஆனால் 1942 க்கு முன்பு ஹையர் கிரேட் பரீட்சைக்கு எழுதித் தேர்ச்சி பெறாத லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கு மட்டுந்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. அந்த உத்தரவு எல்லா லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கும், ஹையர்கிரேட் பரீட்சைக்கு இது வரை போகாதவர்கள் எல்லோருக்கும் அந்தச் சலுகை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த உத்தரவு ஹையர் கிரேட் பரீட்சைக்கு இதுவரையில் போகாதவர்களுக்கும் கூட சலுகை கொடுக்க வேண்டுவதுதான் நியாயம். இந்த முறையில் அரசாங்கத்தார் பரிசீலனை செய்து உத்தரவை விளக்க வேண்டும், அல்லது மாற்ற வேண்டும்.

FORT ST. GEORGE GAZETTE

VIII STANDARD PUBLIC ExAMINATION 1951

Publication of fresh Text-Books in Languages.

Copies of fresh text-books published departmentally for the VIII Standard public Examination 1951 in the principal languages of the Presidency, Viz., Tamil etc. are available for sale at the Government press, Mount Road Madras-2:

Prescription of Text-book for English (Optional) for the VIII Standard public Examination 1951.

The English Book entitled "Nelson's Third English Reader for Indian Schools" written by Messrs. C. S. Milford and E. M. Milford and published by Thomas Nelson and Sons, Limited, London, has been represcribed as a Text-Book for English (Optional) for the VIII standard Public Examination, 1951.

The following lessons and poems are prescribed for study for the examination:—

Prose—Lessons 1, 2, 11, 12, 13, 15, 19, 17, 19, 20, 21, 22 and 23.

		Lines
Poetry—(1)	Lesson 3—Wonderful World...	18
(2)	Lesson 14—Lucy......................	12
(3)	The Arrow and the Song (from the additional poems in page 123 in the book)......................	12
	Total	42

For Memorization

(1)	Lucy..	12
(2)	The Arrow and the song...............	12
	Total	24

Copies of the book can be had for sale at a net price of As. 15 (fifteen only) from the Local Agents of the above publishers Via. Messrs. Essco Limited, No. 17, Mount Road, Madras 2.

GOVERNMENT OF MADRAS

Education Department

G. O. Ms. No. 1864, Education dated 26 June 1950

Madras Educational Rules—Holders of lower grade training teachers certificate—permission to appear for the Hiqher grade Traininq School Leaving Certificate examination privately—proposal—approved.

Read: From the Director of public Instruction. No. 499-L2/,50—dated 7 th June 1950.

Order:

The Government approve the proposal of the Director of public Instruction that the lower grade trained teachar who appeared and failed in the Hiqher grade Training School Leaving Certificate examination according to the scheme in force till 1942 and who were allowed the concession till 1944, may be permitted as a special case to appear for the Higher qrade Training School Leaving certificate examination under the revised scheme during 1951 and 1952.

(By Order of His Excellency Governor)

RAJAIAH D. PAUL,

Secretary to Government.

PROVIDENT FUND

(G. O. Ms. 2277, Education 12 th August 1950.)

The following amendment to the rules relating to the provident Fund for teachers in non-pensionable service is published:—

AMENDMENT.

In the rule 2 of the said rules, ofter sub-rule (d) shall be added, namely:—

"(e) In the event of the subsequent marriage of a subscriber or where he has a wife or wives and/or a son or sons and/or a Daughteror daughters Livinq at the time or after he has made the declaration in the applicatoin form prescribed in Appendix A, then, unless the said declaration shall already be in favour of a livig wife or livinq son or sons or daughter or daughters the said declaratson shall be or become void."

அறிவுப் பஞ்சத்தால் விளைந்ததே அரிசிப் பஞ்சம்!

செய்தியும்—சிந்தனையும்.

"கடந்த இரண்டு மாதங்களாக ரேஷன் கார்டுகளுக்கு அரிசி கிடைப்பதில்லை. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சரியானபடி போஷிக்க முடியாமல் கட்டாய இலவசப்படிப்பு அமுலிலிருந்துங்கூட 100-க்கு 25 க்கு மேல் பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதில்லை. வந்த பிள்ளைகளும் மத்தியான வேளையில் ஆகாரம் கிடைக்காத காரணத்தால், சோர்ந்து விழுகின்றனர். பார்ப்பதற்கே கோரக் காட்சியாக இருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மத்தியான வேளைகளில் ஏழைப் பிள்ளைகளுக்கு பகல் சாப்பாடு போடப்பட்டது. அரிசிப் பஞ்சத்தின் காரணமாக சாப்பாட்டிற்கு பதில், மேல் நாட்டின் டப்பிப் பால் கொடுக்கப்பட்டது. இன்று அதுவும் இல்லாமல் பாடசாலைக்கு பிள்ளைகளே வருவதில்லை. மத்தியானத்தில் சோர்ந்து விழும் பிள்ளைகளுக்கு எங்கள் சிறு ஊதியத்திலிருந்து இட்டிலி வாங்கிக் கொடுக்கிறோம், கோரகாட்சியைக் கண்டுசகியாத காரணத்தால்"

நடேச அய்யர்,
ஆசிரியர், எடப்பாடி.

"நாம் உணவைப் பற்றி அடிக்கடி பேசுகின்றோம். ஆனால் அந்த உணவு யாருக்கு முக்கியமாகத் தேவை என்பதை சிந்திக்கவில்லை. மக்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த, நாளை நாட்டை ஆளப்போகும் இளங் குழந்தைகளை மறந்துவிட்டோம்.

1949-ல் இம்மாதிரியான உணவு நெருக்கடி இங்கிலாந்தில் நேரிட்டது. அது சமயம் நான் அங்கு இருந்தேன். இங்கிலாந்து உணவு மந்திரி, முதலில் குழந்தைகளுக்கும், இரண்டாவது கர்பஸ்திரீகளுக்கும் உணவு பங்கிடுவதைப் பற்றித்தான் முதலில் கவனம் செலுத்தினர். இங்கோ அவ்விதம் கவனிக்கப்படவில்லை. நம் நாட்டு மக்கள் அரிசி உண்டு பழக்கப்பட்டவர்கள். தென்னாட்டவர்களை சோளம், கேழ்வரகு, கோதுமை, மற்றும் என்னென்னவோ சாப்பிடும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். இப்படி வற்புறுத்தப்படுவதால், மக்களுடைய உடல்வலிமை பாழாக்கப்படுகின்றதைப்பற்றி சிந்தித்தார்களா? ஆட்சியாளர்கள்.

ஆகார நிபுணர்களை இதைப்பற்றிக் கேட்டிருந்தால், நாட்டு மக்களின் உடல் நலம் எவ்வளவு தூரம் பாழாக்கப்பட்டிருக்கின்றது என்பதைப்பற்றி அவர்கள் எடுத்துக்கூறி யிருப்பார்கள். அவ்விதம் மக்கள் உடல் நிலைப் பாழாக்கப்படுவதால், கொள்ளை நோய்கள்மனித சமூகத்தை அழிக்க முற்படுகின்றது. இந்த விபரீதமானநிலை ஏற்படாமல்செய்ய ஒரே வழிதான் உண்டு. இந்தமாகாணத்திற்கு சோளம் அல்ல, கோதுமை அல்ல, அரிசியைத்தான் இறக்குமதி செய்யவேண்டும் என்றும், மக்கள் பசிப்பிணியால் நாளுக்கு நாள் பாதிக்கப்படுவார்களானால், இந்த நாட்டில் கம்யூனிசம் சீக்கிரத்தில் வளர்வதற்கு அரசாங்கமே துணை செய்வதாக ஆகும் என்றும், இந்தக் கருத்துக்களை யூனியன் அரசாங்கத்தாருக்கு நன்றாய் மனதில் ஊன்றும்படி சென்னை அரசாங்கத்தார் எடுத்துக் காட்ட வேண்டும் என்றும்'' டாக்டர் லட்சுமணசாமி முதலியார் 2-9-50-ல் நடந்த சட்ட சபை கூட்டத்தில் எடுத்துக் காட்டியிருக்கின்றார்:

''சாதாரணமாக நமது இந்தியாவில் நல்ல மழை பெய்து பயிர்கள் நன்றாக வளர்ந்து சாகுபடியான காலத்திலுங்கூட, 12 லட்சம் டன்கள் அரிசி பர்மாவிலிருந்து கொண்டுவரப் பட்டது. இதிலிருந்தே இந்தியா எந்தக் காலத்திலும் சுயபூர்த்தி நாடாக இருந்ததில்லை என்று நன்றாக விளங்குகின்றது. அப்படி இருக்க கடந்த 3 ஆண்டுகளாக நாட்டில் மழையில்லாமல், தக்க விளைச்சல்கள் இல்லாமல், உணவுப் பஞ்சம் ஏற்பட்ட இந்த நாட்டில் லட்சத்தி எழுபதினாயிரம் (170000) டன் அரிசி தான் மத்திய அரசாங்கம் பர்மாவிலிருந்து வாங்கியிருக்கின்றது. மாகாணங்கள் தங்கள் சுயஆட்சி பொறுப்பை யூனியன் அரசாங்கத்திற்கு சரண் செய்து விட்டது. யூனியன் உணவு மந்திரி, சென்னை மாகாணத்தில் அரிசிப் பஞ்சம் இல்லை என்றால், ஆமாம் என்று தலை அசைக்கின்றது சென்னை மந்திரி சபை. நாடு முழுவதற்கும் யூனியன் அரசாங்கம்தான் மக்கள் உணவுக்கு பொறுப்பாக்கப்பட்டிருக்கின்றது. சுய தேவை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்ற மத்திய அரசாங்கின் கொள்கை, நாட்டில் நடவாது என்று பல அறிஞர்கள், தலைவர்கள், யூனியன் அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டி வருகின்றார்கள். அது மட்டுமல்ல இந்தக் கொள்கையால் நாட்டில் பஞ்சமும், மக்களிடத்தில் அரசாங்கத்தின் மீது மனக் கசப்பும், அதன் காரணமாக நாட்டில் குழப்பமும், புரட்சியும் ஏற்படும் என்றும் எடுத்துக் காட்டி இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சொல்லும் வார்த்தைகள் எல்லாம் மத்திய அரசாங்கம் கேட்காமல் செவிடர்களாய் இருக்கின்றார்கள். மத்திய அரசாங்கம் மிகப் பலம் பொருந்திய

தாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால், மத்திய அரசாங்கம் எல்லா அதிகாரங்களேயும் கைப்பற்றிக்கொண்டது. மாகாண அரசாங்கங்கள் எல்லாம்; தங்கள் அதிகாரத்தைப் பறி கொடுத்துவிட்டு, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு களைப்போல் ஆளும் சுய அதிகாரமில்லாமல் வட நாட்டை எதிர் நோக்கி நின்றுகொண்டிருக்கிறது. இதன் விளைவு தென்னாட்டில் மக்கள், பஞ்சத்தால், பட்டினியால் சாகவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தற்போது நாட்டில் காங்கிரஸ் ஆட்சி பலம் பெற்றிருப்பதால் மாகாண மந்திரி மார்கள் மத்திய அரசாங்கத்திற்கு அடங்கி ஒடுங்கி, "நாட்டின் நிலையை இந்தியன் யூனியனை எதிர்க்கும் முறையில் எடுத்து காட்டக் கூடாது, அடிபணிந்து நிதானமாக கேட்டுக்கொள்ள வேண்டும்" என்கிறார் சென்னை உணவு மந்திரி. ஆனால் நாம் சொல்வது இந்தியன் யூனியன் ஆட்சியாளர்களை எதிர்க்கவேண்டும் என்பதல்ல. நாட்டில் மக்கள் பசிப்பிணியால் வாடுவதற்கு, சீக்கிரம் இந்தியன் யூனியன் உதவி புரியாமலிருப்பதை இடித்துக் காட்டி மக்கள் மனக் கொதிப்பைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். இம்மாதிரி வங்காளம், உத்திரப் பிரதேசம், முதலிய மாகாண மந்திரிகள், நன்றாக இந்தியன் யூனியன் கொள்கைகளை எதிர்த்துப் போராடியே, தங்கள் மாகாணத்திற்குள்ள சலுகைகளை பெற்றுக் கொண்டார்கள். ஆனல், சென்னை அரசாங்கம் மட்டும்தான் இந்திய யூனியனுக்கு அடங்கி, ஒடுங்கி, அடிபணிந்து இந்நாட்டு மக்களை பசியில் பரிதவிக்கவிட்டிருக்கின்றது."

(சென்னை மெயில் தலையங்கம் 4-9-50)

மேற்குறித்த குறிப்புக்களெல்லாம் அரிசிப் பஞ்சத்தின் காரணமாக இன்று பத்திரிகைகளில் காணப்படும் பல குறிப்புக்களில் சிலவற்றை எடுத்துக் காட்டியிருக்கின்றோம்.

நமது சென்னை மாகாணத்தில் குறிப்பாக தமிழ நாட்டில், அரசிப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் ஏழைகள் தங்கள் குழந்தைகளை ரூ. 2-க்கும், 3-க்கும் விற்கத் துணிந்துவிட்டார்கள். சேலத்தில் புளியங்கொட்டை ரூபாய்க்கு 4 படிகள்கூட கிடைப்பதில்லை, அரிசிக்குப் பதிலாக சாப்பிடுவதற்கு. கற்றாழைக் கிழங்குகளை மக்கள் தின்று சீத பேதியால் பலர் மாண்டு வருகின்றனர். குழந்தைகளுக்கு போதிய அளவு உணவு பெற்றோர்களால் கொடுக்கப்படாமையால், பாடசாலைகளில் பாலர்கள் சோர்ந்து விழுகின்றனர். இந்தக் கோரக்

காட்சி நம் நாட்டில், கொள்ளைக்காரர்கள் வந்த பொழுதும்கூட கேள்விப்பட்டதில்லை. வெள்ளைக்காரர்கள் இருந்த பொழுதும் கண்டதில்லை. காருண்யமுள்ள காங்கிரஸ் ஆட்சியில் தான் இக் கோரக்காட்சியைக் காண மிக மிக வருந்துகிறோம்.

இந்தச் சீர்கேடான நிலை, நமது தென்னாட்டில் விளைந்ததற்கு உண்மைக் காரணங்களை படம் பிடித்துக் காட்டி, ஆட்சியாளர்கள் கண் திறந்து மக்களின் பசிப்பிணியைப் போக்க விரைவில் செயலாற்றும்படி செய்த, நமது சென்னை மெயில் ஆசிரியருக்கு இத் தென்னாட்டு மக்கள் தங்கள் நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ள மிக மிக கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். இதை நாம் மட்டுமல்ல, உணவு மந்திரி திரு. ரோச விக்டோரியாவும் அவ்விதம் கூறுகின்றார்.

மெயில் ஆசிரியர் குறிக்கும் முக்கிய காரணம், இந்தியன் யூனியன் ஆட்சியாளர்கள், வெளிநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வேண்டிய அரசியை கொள்முதல் செய்யாமல், சுய பூர்த்திக் கொளகைக் காரணத்தைக் காட்டுவது நடமுறையில் நடவாத காரணம் என்பதாகும். இந்தக் காரணம் சாதாரண அறிவு படைத்த எந்த மனிதனும் சற்று சிந்தித்தால், இந்தக் கொள்கை நடை முறையில் இந்த நாட்டில் கொண்டு வருவதற்கு பல ஆண்டுகள் ஆகும் என்பது வெளிப்படை.

நாட்டில் ஜமீன்தார் முறை அடியோடு ஒழிக்கப்பட்டு, ஜப்பான் நாட்டைப்போல் உழைக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 ஏக்கர் நிலமும், ரஷ்ய நாட்டைப்போல், விவசாயிகளுக்கு கூட்டுப் பண்ணைத் திட்டப்படி, உழவுக்கு வேண்டிய விஞ்ஞானக் கருவிகள், மழையை நம்பி வாழாமல் பூமியிலிருந்து தண்ணீர் கொண்டுவர பல கருவிகள், நல்ல விதைகள், உரங்கள், நம் நாட்டு விவசாய மக்களுக்கு குறைந்த விலையில் அரசாங்கம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் பூராவும் தானியங்கள் விளையும். தேவைப் பூர்த்தி என்ற கொள்கையும் படிப்படியாக நிறைவேற்ற முடியும். மேற்குறித்த முறைப்படி நமது ஆட்சியாளர்கள் இதுவரையில் விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் உதவி செய்திருக்கிறார்கள் என்பதை நமது வாசகர்களே சிந்தித்தால் உண்மை புலப்படும். நமது ஆட்சியாளர்கள் இதையெல்லாம் சிந்திக்காமல், டெல்லி ஆட்சியாளர்கள் எது கூறினாலும் தலையாட்டி பொம்மைகளைப் போல், தலை ஆட்டுவதும், நமது நாட்டின் உண்மை நிலையை பகிரங்கமாக, டெல்லி ஆட்சியாளர்களுக்கு எடுத்துக்காட்டாமல்; மக்கள் மன்றத்திற்கு வெருங்கையோடு வந்து, மக்கள் அரிசி

யைப் பதுக்குகிறார்கள், ரேஷன் கார்டுகளை துர்பிரயோகப் படுத்துகிறார்கள் என்றெல்லாம் சில்லரைக் காரணங்களைக் காட்டி உண்மையை மறைப்பதில் பிரயோஜனமில்லை.

நமது மாகாணத்தில் 2 ஜில்லாக்கள் அளவுகூட இல்லாத சிறிய தீவு, சிலோன் நாடு, தங்களுக்கு வேண்டிய அரிசியை முன்னறிவோடு, பாக்கிஸ்தான், பர்மா முதலிய நாடுகளிலிருந்து ஏராளமான அரிசியை வரவழைத்து, தங்கள் மக்களுக்குக் கொடுத்து மிகுந்துபோன அரிசியை சுமார் 9000 டன் சென்னை அரசாங்கத்திற்கு கடன் கொடுத்திருக்கிறார்கள். சிலோன் ஆட்சியாளருக்குள்ள முன்னறிவு நமது ஆட்சியாளருக்கு இல்லாமல் போனது ஆச்சரியமே! அறிவு இருந்தது வெள்ளையனை வெளியேற்றுவதற்கு, ஆனால் நாட்டை ஆள, வட நாட்டிற்கு வணங்காமலிருக்க அறிவுப் பஞ்சம் ஆட்சியாளரை பிடித்துக்கொண்டு வாட்டுகிறது. சந்திர குப்தன், சமுத்திர குப்தன், ஹர்ஷன், கனிஷ்கன், அசோகன், அக்பர், அவுரங்கசீப் போன்ற பெரிய மன்னர்கள் எல்லாம் டில்லியில் ஆட்சிபுரிந்தார்கள். ஆனால் தென்னாட்டை யாரும் அடிமை கொண்டு ஆளவில்லையே! இதை நமது இந்திய சரித்திரம் நன்றாக எடுத்துக் காட்டுகின்றதே! அப்படியிருக்க ஆங்கிலேயனுக்கும் அடிபணியாத தென்னாடு, வட நாட்டு ஆட்சியாளருக்கு அடி பணிவானேன். இதை ஆட்சி புரியும் நமது காங்கிரஸ் தோழர்களை சற்று சிந்திக்க வேண்டுகிறோம்.

இந்தியா பாரதபூமி, பாரதமாதா என்று வெள்ளையனை வெளியேற்ற இந்தியாவிலுள்ள மக்கள் ஒன்றுபட்டு துரத்துவதற்காகசொல்லப்பட்ட, பழைய பிரசார பல்லவிகளை வைத்துக் கொண்டு, பாரதமாதாவின் இடது கையும், வலது கையும் பாரத புத்திரர்களால் பாக்கிஸ்தானமாக வெட்டப்பட்ட பிறகு, இந்தியா ஒரே நாடு என்று பறைசாற்றிக் கொள்வதில் அர்த்தமில்லை. மொழியாலும், கலையாலும், நடையாலும், நாகரிகத்தாலும், வேறு பட்டு வாழும் மக்களை அவர்களின் நாடுகளை, ஆட்சிகளை, ஓர் யூனியன் சட்டத்தின்கீழ் ஓரே ஆட்சியின்கீழ் கொண்டுவந்ததின் விளைவே இன்று நம் நாட்டில் கோரக் காட்சியளிக்கும் அரிசிப் பஞ்சமும், பட்டினிப் பட்டாளங்களுமாகும். வடநாட்டாருக்கு கோதுமையும், சோளமும் முக்கிய உணவு. தென்னாட்டாருக்கு அரிசி முக்கிய உணவு. வடநாட்டார் தென்னாட்டாரை கோதுமைச் சாப்பிடும்படி வற்புறுத்துகின்றனர். கோதுமைச் சாப்பிட்டால் தென்னாட்டாருக்கு வயிற்றுக்கடுப்பு, அஜீரணம் ஆகியவைகள் உண்டாகின்றன.

இப்படியே, கருத்துக்களிலும், கொள்கைகளிலும், பொருளாதார நிலையிலும், கல்வி முறையிலும், ஆட்சி நடைமுறையிலும், அபிப்பிராய பேதங்கள் நாளுக்கு நாள் டில்லி ஆட்சிக்கும், தென்னாட்டு ஆட்சிக்கும் வளர்ந்துகொண்டே வருகிறது. இதை அடிக்கடி நமது நிதி மந்திரி மதியுடன் சட்டசபையிலேயே எடுத்துக் காட்டிக்கொண்டுதான் வருகிறார்.

கல்வி வளர்க்க, பாடசாலைகளை அதிகரிக்க, ஆசிரியர் சம்பளம் உயர்த்த பணமில்லையே; டில்லி அதிகாரிகளை கேட்டும் பார்க்கின்றோம்; அரிசியில்லையே; கோதுமை, சோளப் கொடுக்கிறோம்; வடநாட்டாரைப்போல் ரொட்டிச் சுட்டுச் சாப்பிடு; வயிற்றுக்கு வலியாயிருந்தால் அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது; டில்லி உத்தரவு அப்படி, அரிசி 6 அவுன்ஸாவது ஒழுங்காக கிடைக்குமா? ஜோஸ்யம் எங்களுக்குத் தெரியாது; டில்லி ஆட்சியாளர்களை கேட்டுத்தான் சொல்ல வேண்டும், நீங்கள் எதற்காகவா எங்கள் ஓட்டைப் பெற்று மந்திரிகளாக இருக்கிறீர்கள்? டில்லி சர்க்கார் சட்டப்படி அவர்கள் தூதுவர்களாக நாட்டை ஆள இருக்கிறோம்; என்ற முறையில் தற்போது நமது தென்னாடு ஆட்சியாளர்களின் முன்னறிவில்லாத காரணத்தால் அரிசிப் பஞ்சத்தில் அழிந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை உடனடியாக முற்றும் மாற வேண்டும் என்று நமது ஆட்சியாளர்களுக்கு தைரியமாக **மெயில் பத்திரிகை** எடுத்துக் காட்டுவதுபோல், வங்காளம், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் மந்திரிமார்கள் டில்லி ஆட்சிக்கு மண்டியிடாமல் நியாயத்திற்கும், உரிமைக்கும், மக்கள் நன்மைக்கும் முன்னின்று போராடி தங்கள் மாகாணங்களுக்கு பல சலுகைகள் பெறுவதுபோல் தென்னாட்டு மக்களின் குறைகளை எடுத்துக்காட்டி போராட சென்னை அரசாங்கம் முன் வரவேண்டும். இதை ஆட்சியாளர்கள் சற்று சிந்தித்து செயலாற்றுவார்களா?

அநுதாபம்.

சேலம் கல்லூரித் தலைவர் மறைவு.

சேலம் கல்லூரித் தலைவர். தோழர். இராமசாமி அவர்கள் 53 வது வயதில், 19-8-50 இரவு திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலியால் உயிர் நீத்தார். தமது கடைசி மூச்சு காற்றோடு காற்றாய் கலந்து விட்டது. பிறக்கும் மனிதன் இறக்கிறான்! இறப்பும் பிறப்பும் நாம் காணும் நித்திய நிகழ்ச்சிகள்.

வானத்தில் நட்சத்திரங்கள் சிதறுவதைக் கண்டு மனிதன் சஞ்சலப்படுவதில்லை, ஆனால் வானத்திலுள்ள சந்திரன் சிதறி விழுந்து விடுமானால் மனிதன் சஞ்சலப்படுவது மட்டுமல்ல, மனித சமுதாயமே அழிந்து விடவும் கூடும். அது போல மனித சமுதாயத்திற்கு மங்கா சந்திரனைப் போல கடந்த 23 ஆண்டுகளாக சேலம் கல்லூரியின் தலைவராக பதவியேற்று, ஆட்சியாளரின் கட்டுதிட்டங்களுக்கு அடிபணியாமல், வைதீகத்தின் உறுமலுக்கு அஞ்சாமல், மாணவர்களின் இருண்ட உள்ளத்தை சீர்திருத்தப் பாதையில் ஒளிபெறச் செய்து, நல்லதோர் கல்விப் பணியைத் தமிழ் நாட்டில் இடைவிடாது செய்து வந்தப் பேராசிரியர் நமது ராட்சாமி அவர்கள் மறைவு, நமது ஆசிரியர் உலகத்திற்கே பெரும்நஷ்டமாகும். நமது அனுதாபத்தை அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்.

மதிப்புரை :

E. S. L. C. 1951, இங்கிலீஷ் நோட்ஸ்.

சென்னை நகரில் முப்பதாண்டுகளுக்கு மேல் இங்கிலீஷ் பாட ஆசிரியராகவிருக்கும் K. P, சேஷாத்திரி அய்யங்கார் எழுதியது விலை அணு பன்னிரண்டு. பிரசுரித்தவர் கல்பதரு பிரசுராலயம் 88. ராமசாமி தெரு சென்னை-1.

நோட்ஸ் முறையில் இதுவரையில் இம்மாதிரி புத்தகம் வெளி வரவில்லை. தற்காலத்தில் கல்வி அதிகாரிகள் இங்கிலீஷ் பாடத்தைத் தமிழ் மூலம் கற்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்கள். அதனுல் விஷயங்கள் எளிதில் புரிகின்றன. அதுவும் சீக்கிரத்தில் கிரகிக்கவும் படுகின்றது. ஆங்கிலப் பழுதம், அதன் தமிழ் அர்த்தமும், ஆங்கில அர்த்தமும், அப் பதம் வாக்கியத்தில் அமைப்பதும் இதில் தெளிவாக இடம் பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் வினுக்களும் விடைகளும் வரிசைக்கிரமமாக எழுதப்பட்டுள்ளன.

இலக்கண பாடம், கதை எழுதுதல், கட்டுரை எழுதுதல், சிறு குறிப்புகளை விரிவாக்குதல், இன்னும் கடிதம் எழுதும் முறைகள் யாவும் விவரமாக இயற்றப்பட்டுள்ளன. 1951ம் வருடத்திற்கு வேண்டிய பாடங்களுக்கு மட்டுமே நோட்ஸ் எழுதப்பட்டுள்ளது. அநாவசியமான பாடங்கள் இதில் இடம் பெறவில்லை. 1950-ம் வருடத்து கவர்ன்மெண்டு பரீட்சையின் ஆங்கில பாட வினுத்தாள் இந்தப் புத்தகத்தில் மட்டுந்தான் வெளிவந்திருப்பதைக் கவனிக்கவும். E. S. L. C. மாணவ மாணவிகளுக்கு இது வரப்பிரசாதம் ஆகும்.

நற்பயனும் வெற்றியும் அடைவது திண்ணம். ஆசிரியர்கள் இப்புத்தகத்திற்கு ஆதரவளிக்க முன்வருவார்களாக.

Edited Printed and Published, by P. Veeraraghavan, at Venkatesan Press, 94/95 New St. Mannady, G. T. Madras.